7—2—60 | வார வெளியீடு | விலை 16 காசு

சுகமே வேண்டாம்!

—[இராம. அசோகன்]—

வாழ்வுக்கும் வளத்துக்கும் குறைவு ஏன்
    வறுமையோ என்வீடு வந்ததேன்
தாழ்வாகப் பிறர்எண்ணும் நிலையேற்பட் டதேன்
    தாவிவரும் சுகத்துக்கோ பஞ்சமிங்கே
சூழ்கின்ற துயர்க் களவில்லை! அதனுல் எந்தன்
    சீரான திராவிடம் வடவர் தம்மால்
பாழ்பட்டுக் கிடக்கின்ற நிலையை எண்ணிப்
    பாழ்மனம் மகிழ்ந்திருக்க வழிதான் இல்லை!

பொங்கிவரும் காவிரியின் அழகை எண்ணிப்
    புகழ்மணக்கும் இலக்கியத்தின் பெருமை எண்ணி
மங்காத கலைவளர்ந்த அழகை எண்ணி
    மகிழ்வாலே சிரித்திருக்க எண்ணும் நேரம்
எங்கிருந்தோ என்னினைவில் வந்து சேரும்
    என்னுட்டின் இருளான அடிமை வாழ்வு
மங்கையினைக் கற்பழிக்கும் கொடுமை போலே
    மனமகிழ்வை அவ்வெண்ணம் கொன்று தீர்க்கும்!

பெற்றவளும் பிறர்கையில் அடிமையாகப்
    பிடிபட்டுப் போயிருக்க எந்தன் வாழ்வில்
வற்ருத செல்வசுகம் வீடு வாசல்
    வகையாகச் சேர்ந்தென்ன? போயுமென்ன?
சுற்றிவரும் பகைதன்னை வெல்லு மட்டும்
    சுதந்திரமாய் என்தாயும் வாழு மட்டும்
மற்றுமொரு இலட்சியமே எனக்கு வேண்டாம்!
    மடியட்டும்! என்வாழ்வில் சுகமே வேண்டாம்!



இல்லோன் இன்பம்!

—[எ. கலைமுகிலன்]—

—ப்டிரி—

இல்லோன் வாழ்வில் இன்பம் இருப்பதேது? இன்பம் நிகழ்வதற்குத்தான் வழியேது? கிடையாது என்பதைத்தான் எழிலுறக் காட்டுகிறது 'குறுந்தொகை'யின் கண் அமைந்துள்ள அருந்தமிழ்ப் பாடலொன்று.

வியப்பூட்ட வல்ல மலைகள்! அம்மலை முகடுகளினின்றும் முழக்கி வரும் அருவிகள்! அவ்வருவியின் மருங்கே அணி அணியாக நிற்கும் அசோகுமரங்கள்! அசோகு மரங்களையடுத்து அழகுறத் திகழும் அகில் மரங்கள்! அகில்மரங்களிடையே நீண்டு வளர்ந்த நாகமரங்கள்! நாகமரங்களை அடுத்து எழிலுறத் திகழும் சந்தன மரங்கள்! சந்தன மரங்களிடையே ஓங்கி வளர்ந்து, பருத்து விரிந்த தேக்கு மரங்கள் திகழ்கின்றன!

அருவிக் கரையிலே அழகுறத் திகழ்கின்ற இம்மரங்களைத் தாண்டித் தென்றலோடு இம்பண்ணொலி யெழுப்பிக்கொண்டிருக்கும் மூங்கில் மரப் புதர்கள். பொலிவுறத் திகழ்கின்றன!

மூங்கிற் புதர்களையடுத்தோர் சோலை! அச்சோலையின்கண் காந்தள் மலர்கள் கண்சிமிட்ட, குறிஞ்சி மலர்கள் குறுநகையால் குவலயத்தை மறக்கவைக்க, வேங்கை மலர்கள் பொங்கும் மகிழ்வினுக்கு மகுடமிட்டுக்கொண்டிருக்கின்றன!

காண்போரின் கருத்தைக் கவர்ந்து, எண்ணத்தைப் பின்னிப் படரும் வண்ணமாய்—வளங்கொஞ்சும் நாடாய்--பசுமைநிறக் காடாய்த் திகழ்ந்துற்ற அம்மலைநாட்டின் கண், தினைப்புனம் காத்துவந்தாள் காரிகையொருத்தி!

முற்றிய கதிரைப் பற்றிச்செல்ல வரும் பச்சைக்கிளிகளையும், இன்ன பிற பறவைகளையும் பாய்ந்தோட்டிக் கதிர்காத்த காரிகையைக் கண்டான் ஓர் கட்டிளைஞன்!

இளமை ததும்ப, எழில் தவழ தினைப்புனம் காத்துவந்த காரிகையின் உள்ளமும், அவ்விளைஞனின் இதயமும் ஒன்றியது! இன்ப நினைவுகள்...இன்பக் காட்சிகள்... நெஞ்சத்தே தோன்றி மறைந்தன. காலம் கடுகியது; கதிரும் காய்த்துக் குலுங்கியது, பருவத்தின் எழில் குலுங்கும் ஏந்திழையாளைப் போல்.

முற்றிய கதிரை அறுத்தெடுத்துச் சென்றனர், சேல்விழியாளின் பெற்றோர்கள். காதலனும் காதலியும் சந்தித்துச் சதிராடிய எண்ணங்கள் இருவர் உள்ளத்தேயும் வாட்டிவதைக்கப்பிரிந்தனர். பிரிந்த நேரத்தில் காதலனிடம் 'என் இல்லின் பக்கல் வந்து மரக்கிளைபற்றி உலுக்குவதாயின் யான் வருவேன்; பெறுவோம் இன்பம்; பிரிவோம் பின்னே' என்று கூறிவிட்டு வருகிறாள்.

காரிருள் கப்பியநேரம் காதலரிருவரும் கலந்துறவாடிக் களித்து மகிழ்கின்ற காட்சி யாருக்கும் தெரியக் கூடாதென்ற எண்ணம் இதயத்தே எழ, இரவு நேரத்தில் எவருக்கும் தெரியாமல், ஒலியெழா வண்ணம் நடந்துவந்தான் வனிதையைக் கண்டு கலந்துறவாடி மகிழ!

வந்தவனின் எதிரே......ஊர்க் காவல்காரர்களும், குரைக்கின்ற நாய்களும் தோன்ற, அச்சத்தால் அடங்கியொடுங்கி அமைதியாக வந்த வழியே திரும்பிவிடுகிறான்.

இப்படியே பல நாட்கள்......பல இரவுகள் கழிந்தன!

இன்னல் பலவற்றையும் தாண்டி, தையலின் வீட்டுப்பின் புறத்தே வந்துவிட்டான். வனிதையைக் காணத் துடித்தது உள்ளம்; இருக்காதா? எத்தனையோ தினங்கள் ஏக்கத்தோடு கிளம்பி, இடையிலே........எதிர்ப்பட்ட தொல்லைகளால் திரும்பியவனின் உள்ளம், காதலியின் இல்லத்தை அடைந்தபின் துடிக்காதா?

துடிக்கும் தன் இதயவோடையில் எழில் மலரென இடம்பெற்றுவிட்டவளுக்குத் தன் வருகையைக் காட்ட, மரக்கிளையொன்றைப்பற்றி உலுக்கினான். ஒலியெழுந்தது!

அலையெனத் தொடர்ந்தெழுந்த ஆவலை அகத்திருத்தி, ஆரணங்கைக் காண மரக்கிளையை உலுக்கிய அவ்வொலி, உறக்கத்தைத் தூக்கியெறிந்து படுக்கையிலே புரண்டு கொண்டிருந்தவளின் செவிகளில் சென்று நின்றது. ஆயினும் எழுந்துவரவில்லை!

சற்று நேரத்திற்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று நேரிழையாளின் நெஞ்சத்தில் தோன்றி மறைந்தது.

ஆம். பறவைகள் ஒன்றையொன்று விரட்டியதால், மரக்கிளைகளினிடையே நீண்டதோர் ஒலியெழுந்தது.

அவ்வொலி கேட்ட காரிகையாள் களிப்போடு எழுந்தாள்; வந்துவிட்டான் காதலன்; சிந்தை குளிர்ந்திட இன்பத் திளைப்பிலே இறுமாந்திருப்போம்; கண்ணே! மணியே! கற்பூரப் பெட்டகமே என்று சொல்லாரம் சூட்டிச் சுகமளிப்பார் என்ற எண்ணத்தில் எழுந்து வந்தாள்!

எண்ணிய எண்ணமும், இன்ப நினைவுகளும், கட்டிய கற்பனைக் கோட்டைகளும் தகர்ந்து தூள் தூளாகி உதிர்வதுபோல் பறவைகள் சிறகடித்துக் கிளைவிட்டுக் கிளைக்குப் பறப்பதைக் கண்டாள்; அதனால் எழுந்த ஒலியென அறிந்தாள்; தன்னைத்தானே நொந்து கொண்டு சென்று படுத்தாள்!

இந்த நிகழ்ச்சி நெஞ்சத்தில் எழவே, பறவைகள் தான் சிறகடித்துப் பறக்கின்றன என்று எண்ணிக்கொண்டு இருந்துவிட்டாள்!

(16-ம் பக்கம் பார்க்க)

நமதமைச்சரின் வட இந்தியா!

18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (7—2—60) தனிப் பிரதி 16-காசு | இதழ் 30

"இந்தி மொழி வெறியை வட இந்தியர்கள் கைவிட்டால்தான் நாட்டிலுள்ள மொழிப் பிரச்சினையில் சுமுகமான விரைவான முடிவு காணமுடியும். கணக்குப் பாடங்களுக்கான எண்களை இந்தியிலேயே எழுதுதல், பொதுவிஞ்ஞானச் சொற்களை இந்தியில் மொழி பெயர்த்தல் போன்ற **மொழி வெறியால்** இந்தி பேசாத மக்கள் பாதிக்கப்படுவர். மேலும், மைல் கல்களில் கூட இந்தி எண்களையே உபயோகப்படுத்துவது போன்ற செயல்களும் வரவேற்கத் தக்கதல்ல"

3—2—60ல், சென்னைத் தியாகராய நகரிலுள்ள இந்திப் பிரசார சபையில் நடைபெற்ற இந்தி மொழிக் கருத்தரங்கைத் துவக்கி வைத்த கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள்தான் நாம் மேலே குறிப்பிட்டுள்ளபடி பேசியுள்ளார். உள்ளம் திறந்து உதிர்த்த கருத்துக்கள்தாம் இவை என்பதில் எமக்குச் சிறிதும் ஐயப்பாடோ நம்பிக்கைக் குறைவோ இல்லை. என்ற போதிலும், நமது கல்வியமைச்சருடைய இந்தக் கருத்து, அவர் கூறும் வட இந்தியர்கள் மனதில் உறுத்த வேண்டுமே! இதனைத் தொடர்ந்து அவர் இதற்கான பணியில் ஈடுபடுபவரா என்பதில் தான் நமக்குச் சிறிது ஐயப்பாடும் நம்பிக்கையின்மையும் ஏற்படுகின்றது. ஏனென்றால், இதற்கு முன்பு கூடப் பலதடவைகளில் இந்தி மொழிவெறிபற்றிக் கடிந்து பேசியுள்ளார் நமது கல்வியமைச்சர். மைல் கற்களில் இந்தி எண்களைப் புகுத்தும் திட்டம் நாம் கூறும் வட இந்தியர்களால் ஏற்படுத்தப்பட்டபோது, நாம் அத்திட்டத்தை மிகமிக வன்மையாகக் கண்டித்தோம். நமது கல்வியமைச்சரும் அந்தச் சமயத்தில் "இதில் எனக்கும் பங்குண்டு" என்ற முறையில் மைல் கற்களில் இந்தி எண் பதிப்பதைப் பலமாகக் கண்டித்தது நமக்கு நினைவில் இருக்கிறது. ஆனால், அதனைத் தொடர்ந்து அவர் எந்த நடவடிக்கையும் இது நாள் வரை எடுக்கவில்லை என்பதை நாம் இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியவில்லை.

சந்தர்ப்பம் வரும்போது, தகாத செயல் என்று தமக்கும் பிறர்க்கும் படுவதைக் கண்டிப்பதும், பிறகு அந்தத் தகாதசெயலை வளரவிடுவதும்பொறுப்பிலுள்ளவர்கள், அதிலும் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் செய்யும் காரியமல்ல — கையாளும் முறையல்ல என்பதற்காகவே இதனை இங்கு குறிப்பிடுகிறோம்.

"வட இந்தியா, வட இந்தியர்; தென் இந்தியா, தென்னிந்தியர் என்று பேசுவோரெல்லாம் நாட்டைத் துண்டாடும் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இவர்கள் கூற்றில் சிறிதும் பொருளோ தெளிவோ இல்லை. மக்களிடையே பிளவு மனப்பான்மையை உண்டாக்கிப் பகைமையை வளர்க்கவே இவர்கள் வட இந்தியா தென்னிந்தியா என்று பிரித்துப் பேசுகிறார்கள்" என்று இதே நமது கல்வியமைச்சர் எண்ணற்ற பொதுக்கூட்டங்களிலும், மாநாடுகளிலும், கமிட்டிக் கூட்டங்களிலும், ஏன், சட்டசபையிலும்கூடப் பேசியுள்ளார். இதனை நாமறிவோம், நாடும் நன்கறியும்.

ஆனால், அதே கல்வியமைச்சர் இதோ பேசுகிறார்; இல்லை, இல்லை உச்சரிக்கிறார் அந்த 'ஆகாத' சொற்றொடரை!

"குறிப்பாக இன்று **வட இந்தியாவில்** ஒருவிதமான மொழி வெறி இருந்து வருகிறது"

இது, ஏக இந்தியாவின் ஒரு பகுதியாகவுள்ள சென்னை இராச்சியத்துக் கல்வியமைச்சர் உதிர்த்தது தான்.

வட இந்தியா

வட இந்தியர்

என்ற சொற்கள் இந்தப் 'பாரதத்தில்' உள்ளவர்கள் வாயிலிருந்து வெளிவரலாமா? இந்தியா என்பது கூடச் சிறிது சிறிதாக மாறி, அடிக்கடி 'பாரதம்' பேசப்படும் இந்த நாட்களில் வட இந்தியா தென்னிந்தியா என்று பேசுவது 'பாரத புத்ரர்களுக்கே அடாத செயலன்றோ! என்று அங்கே உள்ளவர்கள், அங்கே என்றால், அது எங்கே என்று இங்கு எப்படிக் குறிப்பிடுவது? அகில பாரதத்தில் அங்கென்றும் இங்கென்றும் ஏது? எல்லாம் ஒன்றே! எங்கும் ஒன்றேயன்றோ!

அங்கென்றால் வடக்கென்றும்,

இங்கென்றால் தெற்கென்றும்,

அங்கென்றால் வட இந்தியா என்றும்,

இங்கென்றால் தென் இந்தியா என்றும்,

அவர்கள் என்றால் வட இந்தியர்கள் என்றும்,

இவர்கள் என்றால் தென்னிந்தியர்கள் என்றும்,

எப்படிப் பிரித்துப் பேசுவது? இது பேதைமையன்றோ! பிளவு மனப்பான்மையின்பாற்பட்டதன்றோ!

என்றாலும், பேசுகிறார் — இவ்வளவையும் தாண்டிவந்து நின்று பேசுகிறார் நமது கல்வியமைச்சர் —காங்கிரசமைச்சர். ஏன் பேசுகிறார்? எப்படிப் பேசுகிறார்? விளக்கம் தேவையில்லை. அவர் ஒரு தமிழ்மகன், தமிழ் நாட்டவர், தென்னாட்டவர், திராவிடத்தின் எதிர்காலத்தவர். எனவேதான், எவ்வளவு மூடிமறைத்தாலும், முன்னே வந்து நிற்கிறது—தன்னையும் அறியாமல். தான் ஒரு தமிழ்மகன் என்ற தலையாய உண்மை. இதனை எந்தப் பாரதமும் ஏக இந்தியாவும் மறைத்துவிட முடியாது-- மாற்றிடவும் முடியாது என்பதனை நமது கல்வியமைச்சரின் 'வட இந்தியா, வட இந்தியர்கள்' என்ற சொற்கள் நிலைநாட்டிவிட்டன.

இந்த நல்ல பண்பு — தமிழ் மக்களுக்கே உரித்தான இந்தச் சிறந்த பண்பு, பாரதம் இரவலாகப் பெற்றிருக்கும் நமது கல்வியமைச்சரிடம் மறையாது —மாறாதிருப்பதைக் காண மகிழ்கிறோம். இது இனியும் தொடர்ந்து குறிப்பாகத் தமிழகத்திற்கும், சிறப்பாகத் திராவிடத்திற்கும் ஏற்றம் தரும் வகையில் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறோம்.

அப்படியில்லாமல், நாம்—காங்கிரசார் கூறும் வட இந்தியா வேறு; நீங்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூறும் வட இந்தியா வேறு; அதற்குப் பொருள் இது, இதற்குப் பொருள் அது என்று கூறிக் குட்டையைக் குழப்பினாலும் குறைமதியுடையோரன்றி மற்றெவரும் ஆளுக்கொரு வட இந்தியாவோ ஆளுக்கொரு தென்னிந்தியாவோ இருப்பதாகச் சொல்வதை நம்பமாட்டார்கள். சந்தர்ப்பவாதிகள் சமயம் நேரும்போது கையாளும் முறையென்றே இதனைக்கொள்வர். எனவே, இதற்கு நமது கல்வியமைச்சர் இடமளிக்கமாட்டார் என்ற நம்பிக்கையை, அவர் தம்முடைய செயல்முறைதான் இனி நமக்கு — நாட்டவர்க்கு உண்டாக்க வேண்டும்.

இந்த நல்ல பண்பு ஏற்படுவதற்கு அவரிடமுள்ள மோகம் சிறிது குறையவேண்டும். அவரிடம் உள்ள பதவி மோகம், தமிழ் நாட்டின்மீதும், தமிழ் மொழியின்மீதும் ஏற்படவேண்டிய மோகத்திற்கு இடையூறாக நிற்கிறதென்பதை நாம் நன்கறிவோம். அவரிடமுள்ள பதவி கட்சிச் சார்பாக ஏற்பட்டு தோன்றுகையால், அவர் கட்சிக் கட்டுப்பாடுகளை கடந்து நின்று காரியமாற்ற முடியாத நிலையில் இருக்கிறார் என்பதையும் நாமறிவோம். என்றபோதிலும் சிற்சில சமயங்களில் கட்சியையும் அதன் கட்டுப்பாடுகளையும் மறந்து பேசிவிடுகிறார். அதனால், நமக்குச் சிறிது பற்றும் பாசமும் அவரிடம் உண்டாகி, அவர் பதவியிலிருந்தாலும், ஓர் கட்சிச் சார்புள்ளவராக இருந்தாலும், நாட்டுக்குப் பொதுவான நல்ல காரியங்கள் செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் நேரிடும்போது 'இந்தி மொழி வெறி' 'வட இந்தியர்' என்று கூறுவதோடு மட்டும் தம்முடைய பணி முடிந்துவிட்டதென்று இருந்துவிடாமல், சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிடைக்கும்போதெல்லாம் தன் நாட்டின் பொதுவான நன்மைக்காகப் போராடத் தயங்கக்கூடாது— அந்தச் சமயங்களில் இவை எல்லாம் எதிர்க்கட்சிகளால் அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரால் கூறப்படுபவை; இவற்றை நாமும் எடுத்துப் பேசினால்— முறையிட்டால், நம்முடைய மதிப்பும் மாண்பும் என்னாவது என்றுள்ள போக்கிலிருந்து விடுபட்டுத், தானும் ஒரு தமிழன் என்பதை மனதிலிருத்தி, நாட்டின் முன்னே நிற்கும் நலிவுகளை இழிவுகளைப் போக்க முன்வர வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் இதனை எழுதுகிறோம். இவ்வளவையும் மீறி, நான் யார்? நீ யார் என்று கேட்பதும், இவர்கள் கூறியா நான் ஒன்றைச் செய்வது என்று பேசுவதுமாக இருந்தால் நம்முடைய வட இந்தியாவும் அமைச்சருடைய வட இந்தியாவும் ஒன்றா? வெவ்வேறா என்று எடை போட்டுப் பார்க்கும் பொறுப்பைப் பொதுமக்களிடம் தான் விடவேண்டும்.

★

விடிவெள்ளி உதிக்கும் நாள் எந்நாளோ?

வையகத்து வளமெல்லாம் வளர்ந்த வரலாற்றை ஆய்வுக் கோலால் அளந்திடும் அறிஞர்களின் முடிபிலே திகழ்ந்திடும் உண்மை முடிவுதான் என்ன? செயற்கை சிரித்திடும் ஒலிகேட்டு அப்பக்கம் திரும்பினால் நமக்கு அது கூறும் நீதிப் பாடந்தான் என்ன? பாடுபடும் பாட்டாளியின் குருதியை உண்டு, வளர்ந்து, வளம் பெற்றவைகள்தான் செய்பொருளத்தனையும் என்ற நீதிக்குரலொலிதான், நம் செவிகளிலே ஒலித்த வண்ணமிருக்கின்றன. குருதியை ஈந்து வளர்த்த செய்பொருளைச் செய்தவன் பயன்படுத்திப் பலன் காணப் பாரிலுள்ள முதலாளி வர்க்கம் செல்வத் திரையிட்டுத் தடை விதித்து வருகிறது. உலகின் எந்த மூலையிலும் உழைப்பாளிகள், உழைபபின் பலனை அனுபவிக்கும் உரிமையைப் பெறாமல்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், 'உழைப்பு என்றால் என்ன?' என்று கேட்கும் உலுத்தர்கள், தொழிலாளர் குருதியிலே விளைந்த செய்பொருள்களை அனுபவிக்கவும், உழைப்பாளிகளை அடக்கியாளவும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் இன்றைய கேடுகெட்ட சமுதாயத்தில். பாடுபடும் பாட்டாளிகள் பாட்டின்பலன் காணாது பஞ்சையராய், பராரிகளாய் அலைந்து திரியும் கோரக் கொடுங் காட்சிகளைத்தான் நபமால் காணமுடிகிறது. ஆடாது அசையாது காரில் ஏறிப் பவனிவரும் கனவான்கள் உல்லாச மாளிகையில் மந்தகாச வாழக்கை நடாத்துதல் மட்டுமல்லாமல், உழைப்பாளிகளின் உரிமையிலும் அதிகாரம் செலுத்தும் உன்மத்த மனப்பான்மை கொண்டு உவகையோடு வாழ்ந்துவரும் நிலையையும் நாம் கண்டு வருகிறோம்.

நீதியும், நேர்மையும், நியாயமும் உண்டு என்று முரசுகொட்டும் நீதிமான்களைக் கேட்கிறோம்; உங்கள் நீதி உலகுய்யப் பாடுபடும் உழைப்பாளர் உரிமைகளில்மட்டும் இப்படி ஏமாற்றத்தை அளிப்பது சரிதானா என்று? காட்டையும், மேட்டையும் திருத்தி வளநிலமாக்கித் தந்திடும் உழவன் உழைப்பிலே பெற்ற செந்நெல்லையும், செங்கரும்புச் சர்க்கரையையும், செவ்வாழைக் கனிகளையும் மாற்றானுக்குத் தந்துவிட்டுத்தான் தன் வாழ்நாளெல்லாம் 'கஞ்சி' 'கஞ்சி' என்று கதறும் கொடுமை நீதியின் பாற்படுமா? பஞ்சினிலே

சி. பெரியண்ணன்

நூல் எடுத்து நல்லபல ஆடை நெய்து பாரினுக்குத் தந்திடும் பாட்டாளி கந்தலுடை அணிந்துகொண்டு திரிகின்ற அவலநிலை எந்நீதி வகுத்த சட்டம்? படும் பாட்டையே கடைக்காலாக இட்டு, அதில் வடியும் வியர்வையைச் சேறாக்கி, எலும்புகளால் சுவர் எழுப்பிக்கசியும் செந்நீரிலே சிந்தும் கண்ணீரைச் சேர்த்து வண்ணக் குழர்பாக்கி மெருகிட்டு மாளிகையாக ஆக்கித்தந்த தொழிலாளிக்குந்த ஒரு குடிசையின்றி நடைபாதையிலே குமுறி வதைபடும் நிலை எந்த நீதியின்பாற்பட்டது? உழைத்திடும் உழைப்பாளிகளுக்கு உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை, இருக்க ஒரு இடமில்லை; இந்நிலையில் தன்னுரிமையைக் காத்துக்கொள்ளவும் அவனுக்கு உரிமையில்லை. இது நீதி வகுத்த நியதியாக முடியுமா? நீதியும், நியாயமும் இன்றைய உலகில் எங்கே இருக்கிறது? நீதி வாழுமானால் இந்நிலை நிலைபெற்று வாழ முடியுமா?

இன்றுள்ள நீதியை வகுத்தவர்கள் யார்? அதை வளர்ப்பதாக அறைகூவல் விடுப்பவர்கள் யார்? அன்புக்கும், பண்புக்கும் சவக்குழி தோண்டிவிட்டுத் தங்கள் சுகபோக வாழ்விற்குப் பாதை அமைத்துக்கொண்ட பணக்கார முதலாளி வர்க்கத்தார்தானே இன்றுள்ள நீதியை வகுத்தவர்கள்! அப்படி இருக்க ஏழைக்கும் அவன் உரிமைக்கும் எங்கே நியாயம் கிடைக்கப் போகிறது!

அன்றொரு நாள் கிரேக்கப் பெருநிலத்தில் வாழ்ந்த ஒருவனுடைய வாழ்க்கையைக் கூறும் வரலாறுதான் நமக்கு இங்கே நினைவுக்கு வருகிறது 'தேன் எடுத்துத் தன் வாழ்வைத் தெவிட்டாத இன்பம் ஒழுகும் தேன்கூடமாக ஆக்கிவிடலாம்' என்று ஆசைப்பட்ட அவன், தேனீ வளர்க்கத் தலைப்பட்டான். கூட்டிலே தேனீக்களைப் பாதுகாத்து, அத்தேனீக்களின் உழைப்பிற்கு உரிமை தந்தால்தான், அவைகள் உழைப்பை முதலாய் வைத்து நீண்ட தூரம் சென்று பூஞ்சோலைகளில் உள்ள வண்ண மலர்களிலே தேன் எடுத்து, தன்னை அடைத்து வைத்துள்ள முதலாளிக்குப் பலன் தரமுடியும்' உழைக்கும் தேனீக்களைக் கூட்டிலே அடைத்து வைத்து அடிமையாக்கினாலுங்கூட, அவைகளுக்கு உரிமை தந்தால்

தான் முதலாளி பலன் பெறமுடியும். அவைகளின் உரிமையைப் பறித்துவிட்டுக் கூட்டிலேயே அடைத்துவைத்திருந்தால் அவைகள் நமக்குப் பலன் அளிக்க முடியாது. இதுதான் நியதி. ஆனால் கிரேக்க நாட்டுத் தேனீ முதலாளி என்ன செய்தான் தெரியுமா? "வெளியே அத்தேனீக்களைத் திரிய விட்டால் நீண்டதூரம் சென்று அதிக நேரம் கழித்துக் குறைந்த பலனைத்தான் அவைகள் தருகின்றன! ஆகையால் அவைகளை கூட்டினுள்ளேயே உழைக்கசெய்து குறைந்த நேரத்தில் நிறைந்த பலனை நாம் அனுபவிக்கலாம்" என்றெண்ணிய அவன் அவைகளின் உரிமைகளாகிய சிறகுகளைப் பறித்துவிட்டான். அவைகளை கூட்டினுள்ளேயே வைத்துப் பாதுகாத்து அவைகளின் முன் நிறைய மலர்களைப் போட்டான். ஆனால், அவைகள் தேன் உற்பத்திசெய்து தரமுடியுமா?

அதைப்போலத்தான் இன்றைய நீதியை வகுத்துள்ளார்கள் பணக்கார முதலாளிகள். உழைப்பாளிகளுக்கு உழைப்பை மட்டும் தந்து உரிமையைத் தராத நீதி, நிலைபெற முடியுமா? அது நியாயந்தானா? அது நீதியின்பாற்படுமா?

இந்நிகழ்ச்சியொன்று சில தினங்களுக்குமுன் இலங்கையிலே நடந்திருக்கிறது. கொழும்பிலிருந்து 100-மைலிலுள்ள நாவலப்பிட்டியிலுள்ள ஒரு தோட்டப் பகுதியில் பாடுபட்டு வந்த உழைப்பாளிகள் தங்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளத் தொழிற்சங்கம் ஒன்றை அமைத்தார்கள். தொழிலாளிகள் உழைப்பதற்கு மட்டும் உரிமை வழங்கி இருக்கும் முதலாளிகள், தொழிலாளரின் உயிர்நாடியான உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள அமைக்கப்பட்ட தொழிற் சங்கத்திற்கு உரிமையை வழங்கச் சம்மதப்படுவார்களா? அத்தொழிற்சங்கத்தை உடைத்துவிடச் சதிசெய்தார்கள். தொழிலாளர்களின் உரிமைச் சிறகுகளை பிய்த்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். அதற்கான சதி வேலைகளிலே ஈடுபட்டார்கள். குண்டர்களை ஏவிவிட்டு தொழிலாளர்களுக்கிடையே மோதல் ஏற்படச் செய்தார்கள். உழைத்துழைத்து உருக்குலையும் பாட்டாளி மக்கள் தோட்டத் தொழில் புரிந்து துவண்டு கிடக்காமல், தங்களின் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளச் சிறகடித்துவெளிச்சென்றால் சீருதிருக்குமா முதலாளி வர்க்கம். கூட்டிலே அடைபட்டிருக்கும் தேனீக்கள் உழைத்துழைத்து உருக்குலைந்தாலும், தான்உண்டு மிஞ்சியதைத்தான் தன்னை அடைத்து வைத்திருக்கும் முதலாளிக்குத் தருகின்றன. ஆனால் மனிதனாகப் பிறந்துள்ள மனித உழைப்பாளிகள் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறாது முதலாளி தரும் பிச்சைக் காசிலே பிழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதோடு தங்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும்முடியாது முதலாளி வர்க்கத்துக்கு மூச்சுக்கு முப்பதுசாமிபோட்டு அடங்கி வாழும் நிலையில் இருக்கிறார்கள். தேனீக்களாவது உழைப்பிலும் கூடத் தங்களின் உரிமையைப் பாதுகாத்துச் சிறகடித்துப் பறந்து சென்று பூக்குலுங்கும் சோலையெல்லாம் சுற்றித்திரிந்து சுதந்திரமாய் வாழுகின்றன. அவ்வுரிமையும் இன்றி இயந்திரம் போல் உழைத்துமாளிகையைவளர்த்துத், தாங்கள் மண்டியிட்டு வாழும் அவல நிலையில் இருக்கிறார்கள் தொழிலாளிகள். "உழைப்பிற்கும் ஊதியத்திற்கும் எத்தனையோ வசதிகளை நாங்கள் செய்து தந்திருக்கிறோம். ஆனால் உரிமைக் குரல் எழுப்ப ஒரு சங்கத்தை அமைத்தால் நாங்கள் எப்படிச் சும்மா இருக்கமுடியும்" என்று தீக்கனல் கக்கியிருக்கிறது இலங்கை தோட்ட முதலாளி வர்க்கம். தான் செய்ய முடியாவிட்டாலும் தருக்கர்களை ஏவவிட்டுத் தங்களின் எண்ணத்தைப் பூர்த்திசெய்து கொள்ளத்திட்டமிட்டிருக்கிறார்கள். தாய்க்கும் தாரத்திற்கும் உள்ள தரமறியமுடியாத தருதலைகள் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்மணிகளிடம் வம்புசெய்துள்ளார்கள். வம்போடு அவர்களைக் கெடுத்ததாகவும் செய்திகள் பரவியுள்ளன. 'மானமென்றால் என்ன விலை' என்று கேட்கும் மாளிகை வாசிகளாய் இருந்திருந்தால் இம்மடமைச் செயலை மர்மமாகவும் மறைத்து விடுவார்கள். ஆனால் தொழிலாளர் பொறுக்கமுடியாச் சினத்தோடு நீதிக்குப் போராடத் தலைப்பட்டனர். சிறிவரும் புலியிடம் சிக்கிய சிறுநரி தனக்கு வலிவுள்ள வரைக்கும் போராடித்தான் பார்க்கின்றது. உண்டுகொழுக்கும் உன்மத்தர்களின் ஊதாரித் தனத்தைக் கண்டிக்கச் சீற்றங்கொண்ட தொழிலாளர் வர்க்கத்தார்க்கும் அவர்களுக்கும் கலகம் ஏற்பட்டது. 'தோட்டத்தில் வாழும் சூப்பிரெண்டைத் தாக்கச் சில தொழிலாளிகள் சென்றுகொண்டிருக்கிறார்கள்' என்ற செய்தி கிடைத்ததாகவும், அதனால் ஒரு போலீஸ்கோஷ்டியை அனுப்பியதாகவும் செய்திகள் நமக்கு எட்டியுள்ளன. ஆனால் உண்மையில் தொழிலாளிகள் அந்நோக்கத்தோடு அங்கு சென்றார்களா! சென்றவர்கள் எத்தனைபேர் என்ற செய்தி ஏதும் அவர்களின் கூற்றில் காணோம். தோட்டத்தின் உள் செல்லும் வழியில் போலீசாருக்குத் தொழிலாளர்கள் தடங்கல் விளைத்து தங்களின் நிதியைக் கூறியிருக்கிறார்கள். அப்போது ஏற்பட்ட கலகத்தால்தான் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உத்தரவு இடப்பட்டதாகக் கொழும்பு போலீஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன! துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மாண்டார்கள். 7 பேர் இரத்த வெள்ளத்தில் குற்றுயிராய்க் கிடந்தார்கள்.

இச்செய்திகேட்டு மனம் கலங்கா மனிதர்களை இம்மாநிலத்தில் எங்குமே காணமுடியாது. உரிமையைப் பாதுகாக்க, உரிமை மன்றமமைக்கப் பாடுபட்டமைக்காக நான்கு பாட்டாளிகள் மண்ணிலே சாய்ந்தார்கள். நீதியும் நேர்மையும் வாழ வழி வகுக்க ஆசைப்பட்ட ஆண்மையாளர்களை ஆணவமும் அநீதியும் தன்னடியிட்டு நசுக்கியிருக்கிறது. நாநிலத்து நல்லவர்களுக்குப் பொல்லாத காலம் அல்லலைத்தான் தந்து வந்துகொண்டிருக்கிறது. இந்நிலை என்று மாறுமோ?

இத் துப்பாக்கிச் சூட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைத் தொழிலாளர்கள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இலங்கைத் தொழிலாளிகள் மட்டுமென்ன! உலகத் தொழிலாளரனைவரும் தான் இக்கொடுமைச் செயலுக்குக் கண்டனக் குரல் எழுப்புகிறார்கள். வஞ்சகத்தால் தொழிலாளிகளின் வாழ்வை நசுக்கினால் அதைக் கண்டு கண்டிக்காத தொழிலாளர் வர்க்கம் இக்குவலயத்தில் எங்குமே இருக்கமுடியாது! இக்கோரச் செயல்குறித்து, பகிரங்க விசாரணை நடத்த வேண்டுமென்று இலங்

தைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர்களான தோழர்கள் தொண்டைமான், சோமசுந்தரம், அஜீஸ், கே. ஜி. என். நாயர், டாக்டர் சில்வா ஆகியோர்கள் பிரதம அமைச்சர் தகநாயகாவிடம் கேட்டுக் கொண்டுள்ளமைக்காகவும், அச்செயலைக் கண்டித்து வேலை நிறுத்தம் செய்த 30,000 தொழிலாளர்களையும் விசாரணை நடத்த இசைந்துள்ளதாக வந்துள்ள செய்தி குறித்தும் நாம் பெருமைப்படுகிறோம். அவர்களின் கோரிக்கை வெல்லட்டும். தொழிலாளர்களின் உரிமை தழைக்கட்டும்.

ஆனால், இறந்தவர்களை எண்ணினால் மனம் வெடித்துப் போய்விடும் போல் இருக்கிறது. மாண்டவர்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு. ...நான்குதானே என்று மனிதாபிமானத்திற்கும், அன்புக்கும், பண்புக்கும் மதிப்பளிக்காத கல்நெஞ்சத்தார் கூறுவதைக் கேட்டு எழும் வேதனையோ அளவிட முடியாது. நசுக்கிய நான்கு உயிர்களிலே ஒன்றையாவது அவர்களால் அளிக்க முடியுமா? அளிக்கத்தான் கூடியதா? பஞ்சமாபாதகத்தை மஞ்சமாக அமைத்துக்கொண்டுள்ள வஞ்சகர் வாழும் உலகத்தில் உரிமைக்குப் போராடி மாண்ட, இல்லை இல்லை, சாகடிக்கப்பட்டவர்களுக்கு சாந்தி எங்கே கிடைக்கப்போகிறது?

அதிலும், சாகாத சரித்திரப் புகழ்பெற்ற தென்னகத்து மண்ணிலே பிறந்து, காலத்துக் கொடுமையால் கடல் கடந்து சென்ற கன்னித் தமிழர்களாயிற்றே செத்தவர்கள் நால்வரும். அனுதாப மொழிக்கு அவர்கள் அருகதையாக முடியுமா? "தமிழ் நிலத்துக்குரியோரே! அன்று வாழ்ந்த உங்கள் வாழ்வெங்கே! அக்ரமத்து அனல்பட்டு பொசுங்கிச் சாகும் உங்கள் வாழ்வெங்கே? ஐயோ! மனித இனத்திலே பிறந்த உங்களில் நான்கு உயிர்களைக் குடித்துவிட்டு நான்குதானே என்று நாக்கிலே நரம்பின்றிக் கூறும் நலிவுரைக்கு ஆளானீர்களே!

பொங்கி எழும் கடல்கள், வங்கத்தை வென்றவனின் நீதியைக் கண்டு சங்கநாதமிட்டு ஒலித்திட்டதே ஒரு நாள்! அந்த நாளெல்லாம் எங்கே! அழிந்ததந்தோ அழிந்தது! அண்டை நாட்டு மண்ணிலே உரிமைக்குப் போராடி உடலை அம்மண்ணிலே சாய்த்துவிட்டீர்க்ளே! சாய்த்துவிடப்பட்டீர்களே! உங்களின் சந்ததிக்கு நீங்கள் வைத்துச்சென்ற செல்வமென்ன? கண்ணீர் கரைபுரண்டு செந்நீராய் மாற, விம்மும் வேகத்தில் கன்னங்கள் புடைத்திட, அழுதழுது மயக்கமுற்று விழுந்து கிடக்கும் அவர்கள் மனைவியர், ஆம்! என் சகோதரிகளைப் பாருங்கள்! பாருங்கள்! பார்க்க மாட்டீர்களா! கொஞ்சும் மலர் விரிந்து நெஞ்சையள்ளும் நேர்த்தியான சோலையாக இருந்திட்ட அவர்கள் வாழ்வு பாழும் பாலையாக மாறிவிட்டதே! பஞ்சையான தமிழ் மக்களே! பாரின் நீதிக்கு நீங்கள் இழைத்த தீங்கென்ன! மழலை மொழி பேசும் குழவிச் செல்வங்களைப் பாழும் வறுமைக் குழியில் ஆழ்த்திவிட்டு நீங்கள் பறந்தீர்கள். பக்கத்துணையாரவர்க்கு! காக்கைக்குக் குஞ்சாகப் பிறந்திருந்தாலும் இனம் அதைக் காக்கும் என்றெழும் வேதனைக் குரலைத்தான் அன்புள்ள அடிமைத் தமிழ் மகனின் உள்ளத்தின் ஒலி ஒலித்திடுகின்றது!

இறந்தவரின் இனமான கன்னித் தமிழ் மக்களே! சிறகில்லாப் பறவைகள்போல் வதைபடும் உங்கள் உடன் பிறந்த சகோதரிகளைப் பாருங்கள்! அவர்களின் கண்களிலே ஒளியுண்டு; ஆனால் காணப் பார்வையில்லை. சோலையிலே நிறைய மலர்களுண்டு; ஆனால் அவர்கள் சூடிய மலரெல்லாம் வாடிவிட்டது, நீதிக் கொற்றவனை இழந்த நாடு நிம்மதியோடு வாழ்ந்த கதையை நாம் கேட்டதுண்டா! கொண்டவர்களை இழந்து குமுறும் அவ்வெரிமலைகள் வெடித்தால்......அவர்களின் வேதனைக் கடல்கள் கொந்தளித்தால்......விம்மும் மூச்சுப் புயலாக மாறிவிட்டால்......கற்புக்கனல் வீசத் தொடங்கிவிட்டால்........ ஐயோ! கொடுமை! கொடுமை!

இவ்வளவு கொடுமைகளுக்கும் காரணக்கர்த்தாக்கள் யார்? நீங்கள்தான்! ஆம்! நீங்கள்தான்! தாயகத்து மண்ணை அந்நியன் சுரண்ட விட்டுவிட்டு அவன் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கும் நீங்கள்தான் குற்றவாளிகள். ஆயிரமாயிரம் அந்நிய அகதிகளுக்கு ஆதரவு தந்து தென்னகத்துப் பொன்னையெல்லாம் அள்ளி அள்ளிக் கொட்டி அழுதுவிட்டு மண்ணுக்குரியோரை அந்நிய நாட்டில் அவதிப்பட விட்டுவிட்டு ஆமைபோல் அடங்கி கிடக்கும் நீங்கள்தான் குற்றவாளிகள்! சுதந்திர வானத்தில் பறந்திடும் காக்கை தன் இனத்தைக் கட்டிக் காக்கிறது! ஆனால் நீங்கள் உங்கள் இனத்தைக் கட்டிக்காக்க உரிமையிருக்கிறதா? காக்கைக்கும் கேடுகெட்ட நிலையடைந்துவிட்டாய்! ஏன் இன்னும் உறங்கிக்கொண்டிருக்கிறாய்! உங்கள் தாய்த் திருநாடு உங்களிடம் இருந்திருந்தால் இக்கொடுமைகள் நடந்திருக்குமா! நடக்குமா! உங்கள் அறிவுக்கு விளக்கம் கொடுங்கள்: திராவிட நாடு திராவிடர்க்காக என்ற உரிமை முழக்கத்தை ஒலித்திடுங்கள். நீங்கள் விரைந்தெழுந்தால் விடிவெள்ளி முளைத்திடாதோ! விடியும் நாள் வந்துவிட்டது, விரைந்தெழுங்கள் தோழர்களே! விரைந்தெழுங்கள்! ★

தஞ்சை மாவட்ட

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

குடந்தை அரண்மனைத் தோட்டம் பேராசிரியர் இருதயராஜ் பந்தலில்

நாவலர் சோமசுந்தர பாரதியார் அரங்கில்

14--2--60 ஞாயிறு அன்று காலை 9-மணி முதல் இரவு 9-மணி வரை நடைபெறும்

தலைவர்: கோவை. **செழியன்,** பி. ஏ.,

திறப்பாளர்: **தோழியர். எஸ். பி. சற்குணம்**

திரு. எஸ். டி. சோமசுந்தரம் (B. E.)

(மாணவர் கழகப் பொதுச்செயலாளர்)

பி. வி. செழியன், (B. A. Hons)

வரவேற்புக்குழுத் தலைவர்.

இரவு 9 மணி அளவில் "பாவம் தமிழையா" என்னும் நாடகம் நடைபெறும்,

கட்டணம்: 3; 2; 1; 0—50

"ஓர் இரவு!"

இரண்டாவது சினிமாக் காட்சி முடிந்து வெளியே வந்தேன். விண் மீன்வான் கரிய மேகத்திரையால் மூடி மறைக்கப்பட்டிருந்தது. குளிர் காற்றுச்சிலுசிலுவென்றுவீசியது. அடங்கிக்கிடந்த புழுதி வெளிக் கிளம்பியது. பெரும் மழையை மண் எதிர்ப்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது.

மழைக்கு முன் அறைக்குச் சென்றுவிடவேண்டும் என்று அலைந்தது மனம்.

போர்க்களத்தை நோக்கிச் செல்லும் வீரர்களைப்போல் காட்சிக்கு வந்த மக்கள் ஓட்டமும், நடையுமாக நாலாப்பக்கமும் சிதறினர்.

ஒருமைல் தூரம் நடந்தாகவேண்டும். வண்டியோ, குடையோ எதுவுமில்லை. மழையோ இதோ வருகிறேன் என்று தன் இடியோசையை முழுக்கிற்று! நடந்து செல்வதைத்தவிர வேறு வழியில்லை. நடையை எட்டிவைத்து விரைந்தேன். பாதி தூரம் செல்வதற்குள் மழை தன் கைவரிசையைக் காட்டிவிட்டது. எடுத்த எடுப்பிலேயே சோ...என்ற பேரொலியுடன் பொழியத் தொடங்கிவிட்டது.

பெருநடை ஓட்டமாக மாறியது. ஓட்டப்பந்தயத்தில்கூட இவ்வளவு விரைவாக ஓடியிருப்பேனா என்பது சந்தேகம். ஓடினேன், அப்படி இரைக்க இரைக்க! என் அறையை அடைந்து நெஞ்சில் கைவைத்துப் பார்த்தேன். நாடித்துடிப்பு மிக வேகமாகப் படக்...படக்...என்று அடித்துக்கொண்டது. சட்டையும், பாண்டும் நன்றாக நனைந்திருந்தன. கைக்குட்டைபோட்டுக் கட்டியதால் நனையாமல் தப்பியதுதலை. நனைந்த ஆடைகளை உலரவைத்துவிட்டு வேறு புதிய ஆடைகளை எடுத்து உடுத்தினேன். மழையில் நனைந்ததால் உடல் நடுங்கியது. சிகரட் ஒன்றை எடுத்து நெருப்புவைத்தேன். மழைக்கு இதமாக இருந்தது. இந்தச் சூழ்நிலை மனதிற்கு உற்சாகவும் இருந்தது.

ஏனோ தெரியவில்லை, பார்த்துவிட்டு வந்த படத்தின் காதல் காட்சிகள் நினைவில் தோன்றித் தோன்றி மறைந்தன. மனம் மீண்டும் மீண்டும் அந்த எழிற் காட்சியையே எண்ணியது. நடக்காததை நினைத்துக் கற்பனையில் மிதந்தது மனம். தூக்கமோ வர மறுத்துவிட்டது.

மேசைமீது கிடந்த இதழ் ஒன்றைப் புரட்டினேன். சற்று முன் பார்த்து வந்த சினிமாப்படத்தின்

இரா. வைத்தியலிங்கம்

விமர்சனம் ஒருபுறம். அப்படத்தின் கதாநாயகியின் கவர்ச்சித் தோற்றம் மற்றொருபுறம். விமர்சனத்தைப் படிக்கத் தொடங்கினேன். ஆனால் விழிகள் இரண்டும் மறுபுறம் உள்ள புகைப்படத்தையே நோக்கின.

உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்கள். திருமணத்தைப்பற்றிய சிந்தனை சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது. "அத்தை மகள் மேகலைக்கு என்ன குறை? நீ விரும்பிய பட்டப்படிப்பு இல்லையேதவிர, பள்ளிப் படிப்பு இருக்கிறதே அவளுக்கு'' வருங்கால குடும்பவிளக்கைப்பற்றி இந்த நேரத்தில் ஏன் இப்படி அலையவேண்டும் மனம்?

உள்ளத்தின் சிந்தனை, அலைகளைப்போல் சிகரட்டிலிருந்துசுருள் சுருளாகக் கிளம்பியது புகை. மழையின் பேரிரைச்சல் ஓ ஓ...... என்று ஒலித்தது. சாரல் காற்று சன்னல் வழியே விர்...என்று புகுந்தது. உள்ளமோ எருமை குழப்பிய குட்டைபோல் குழம்பிக் கிடந்தது!

இந்த வேளையில்...

முக்காடிட்ட நிழல் உருவம் ஒன்று சுவரிலே படிந்தது! நீண்ட நாசியும்; சுருண்ட குழல், நெற்றியில் புரளப் புகைப்படத்தில் வரும் நிழற்காட்சிபோல் தெரிந்தது! மோகினி பிசாசு என்பார்களே, அதோ இது! ஒரு வினாடிதான்— அடுத்த வினாடி பயம் கவ்வ, 'யாரது?' என்றேன் நடுக்கத்துடன்.

வெளியில் நின்ற அந்த உருவம் உள்ளே நுழைந்தது. 'ஐயா! என்னைக் காப்பாற்றுங்கள்' வந்த உருவம் பேசியது. நான் பேசவில்லை; எடைபோட்டன என் விழிகள். அழகின் தலைவியோ; அநார்கலியோ; ஸ்பார்டன்ஹெலனோ; கயசின் காதலியோ—மின்வெட்டும் நேரம்தான். வியர்த்துக் கொட்டியது. குளிர் காற்றில், கொட்டும் மழையில்.

'யார் நீ' என்றேன் வந்தவளிடம்.

"முதலில் என்னைக் காப்பாற்றுங்கள், ஐயா! பிறகு என்னைப் பற்றிச் சொல்கிறேன். காலிகள் இருவர் என்னைத் துரத்திவருகின்றனர்'' என்று கூறிவிட்டுத் திறந்திருந்த கதவைத் தாழ்போட்டாள்

சன்னல் கதவையும் மூடினுள் அவளே!

நான் இமைக்காமல் அந்தப் பேரழகை விழியால் சுவைத்து நின்றேன்.

"ஐயா! இந்த விளக்குச் சிறிது நேரம் அணைந்திருக்கலாமா?" அவள் கேட்டாள். குரலில் அவசரம் தெரிந்தது. நான் பேசவில்லை. விளக்கை அணைத்துவிட்டு நாற்காலியில் அமர்ந்தேன். அவள் மூலையில் ஒருபுறமாக நின்றுகொண்டாள்.

அவளுக்கு ஏதோ ஆபத்து என்பதைத்தவிர, மற்ற விபரம் ஒன்றும் தெரியவில்லை. என் மனம் ஏதேதோ எண்ணியது. "கொலை செய்து இருப்பாளோ, அல்லது திருடுவதற்கு இப்பொழுது புதிய முறை கையாளப் படுகிறதே, அதில் இது ஒரு வழியோ" — இப்படி ஒரு மனம். "இருக்காது, அவள் விழிகளைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே! உலகம் தெரியாதவளாக, கள்ளமற்றவளாக, சமாதானப் புறப்போல் அல்லவா காட்சி தருகிறள்" வேறொரு மனம் இப்படி.

இந்தச் சிந்தனையைக் கலைப்பது போல் வெளியில் இரண்டு குரல்கள் முணுமுணுத்தன. 'சார்' என்று வெளியிலிருந்து குரல் வந்தது. குரல் கொடுத்தவர்கள் கதவைத் தட்டினர்கள். 'யாரது' என்று கதவைத் திறந்துகொண்டு வாயிற்படியிலே நின்றுகொண்டேன். நான் விளக்கை ஏற்றவில்லை. தெரு விளக்குகள் யாவும் பெரும் மழையால் நின்றிருந்தன. வந்தவர்கள் டார்ச் விளக்கால் ஒளி உண்டாக்கினர்.

"சற்றுமுன் இங்கு வெளிச்சம் தெரிந்ததே, இந்தப்பக்கம் யாராவது வந்தார்களா? பார்த்தீர்களா?" வந்தவர்கள் கேட்டனர். குரலில் அதிகாரம் இருந்தது!

காக்கி சொக்காய் அணிந்திருந்தனர். தலையில் மப்பளரைச் சுற்றி இருந்தனர். ஒருவர் கையில் டார்ச்லைட்டும், தடியும் வைத்திருந்தார். மற்றொருவர் கரம் குடையைப் பற்றி இருந்தது. இருவரும் ஒரு குடையின் கீழ் நின்றனர். மழை பெய்துகொண்டிருந்தது இன்னமும்.

"இப்பொழுது நான் இரண்டாம் காட்சி பார்த்துவிட்டு வந்து படுத்தேன். நீங்கள் கூறுவதுபோல் அப்படி யாரும் வந்ததாகத் தெரியவில்லையே. ஏன் ஏதாவது திருட்டா" என்றேன் ஒன்றும் அறியாதவன்போல். "அப்படி ஒன்றும் இல்லை சார். நீங்கள் போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். இது வேறு விஷயம்" என்று கூறிவிட்டுப் போய்விட்டனர்.

கதவைத் தாழ்போட்டுக் கொண்டு மீண்டும் என் இடத்திலேயே அமர்ந்தேன். எவ்வளவு நேரம் என்று தெரியாது.

இந்த வேளையில்...

எங்கள் அமைதியைக் கலைப்பது போல்—மாதா கோயில் மணி மூன்றடித்து ஓய்ந்தது!

சிறிது நேரத்திற்கெல்லாம் விளக்கை ஏற்றினேன். மின் ஒளியில் தந்தச்சிலைபோல் மூலையில் அப்படியே நின்றுகொண்டிருந்தாள் வெண் புறு!

பார்சிப் பெண்களைப்போல் மெல்லிய வெண்மையான ஆலை நெய்த சேலை உடுத்தி — சேலைத் தலைப்பால் தலையை முக்காடிட்டிருந்தாள். மழையில் நனைந்திருந்ததால் மெல்லிய ஆடை உடலோடு ஒட்டியிருந்தது. சிற்பி செதுக்கிய பளிங்குச் சிலையோ என ஐயுறும்படி இருந்தது அவள் எழிற்தோற்றமும், மௌனமாக நின்ற பாங்கும். கண் இமைத்தால், எங்கு இந்த அரிய வாய்ப்புப் போய்விடுமோ என உள்ளம் வாடும்படி இருந்தது, அவள் நின்ற காட்சி!

"இப்படியே நின்ருல், மேற்கொண்டு என்னசெய்யப் போகிருய்?" என்றேன். "இந்த இரவு மட்டும் தங்குவதற்கு அனுமதியுங்கள். விடிந்ததும் போய்விடுகிறேன்" என்ருள்.

விடிந்ததும் போய்விடுகிறேன் என்று அவள் சொன்னதும் உள்ளம் ஏன இத்தனை வேதனை அடையவேண்டும்? அவள் யாரோ! எந்த ஊரோ! எங்கிருந்து வந்தவளோ! போய்விடுகிறேன் என்றதும் ஏன் இத்தனை படபடப்பு!

"அதுசரி, நீ யார்? இதெல்லாம் என்ன? ஒன்றும் சொல்லவில்லையே" என்றேன். 'தயவுசெய்து இப்பொழுது ஒன்றும் கேட்காதீர்கள். அந்தக் காலிகள் திரும்பி வந்தாலும் வருவார்கள். காலையில் சொல்லிவிட்டுச் செல்வேன". என்ருள் தழதழத்த குரலில். விழியில் நீர் திரையிட்டது.

அவள் நின்றுகொண்டேதான் இருந்தாள். நின்ற இடத்தின் கீழ், புடவையிலிருந்து சொட்டிய நீர், தரையை ஈரப்படுத்தியது! மழையில் நனைந்துவிட்ட புறுப்போல் அவள் உடல் நடுங்கியது! "எவ்வளவு நேரம் இந்த ஈர உடையோடு இருப்பாய்! காய்ச்சல் அல்லவா வந்துவிடும்! வேறு உடை தருகிறேன், சரிப்படுத்திகொள்கிருயா? என்றேன். "விடிவதற்குள் காய்ந்துவிடும்; உங்களுக்கு ஏன் தொல்லை. நீங்கள் உங்கள் இடத்தில் போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்" — என்ருள்.

மழையில் நனைந்த மயிலுக்கு பட்டாடை போர்த்தி ஏற்றம் பெற்ற தமிழ்நாடு அல்லவா? என் இதயம் எப்படித் தாங்கும் இந்த மயிலின் அலங்கோலம் கண்டு!

'வேறு ஆடை தருகிறேன், எப்படியாவது சரிப்படுத்திகொள்" — என்றேன் மீண்டும்; அவள் மறுத்தாள், மன்ருடினுள் வேண்டாமென்று! "இந்த ஈர உடையோடு இருப்பதை என்னுல் பார்த்துக் கொண்டிருக்க முடியாது! மாற்று உடை உடுத்தத்தான் வேண்டும்" என்றேன் கட்டாயமாக!

என் தமக்கையின் திருமணத்தின்போது, கிடைத்த எட்டுமுழச் சரிகை வேட்டியும், ஆறுமுழச் சரிகை மேலாடையும் அப்படியே இருந்தன பெட்டியில்! அதையும், வட்டக் கழுத்தும், நீண்ட கையும்கொண்ட பனியினையும் எடுத்து அவளிடம் நீட்டினேன். இந்த நிலையிலும் அவளை

விருந்தாசலம் நகர
தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக

சி. என். அண்ணுதுரை
அவர்கள் தலைமையில்

நடிப்பிசைப் புலவர்
கே. ஆர் இராமசாமி
அவர்கள் முன்னிலையில்

விருத்தாசலம் மஜீத் அரங்கில்
14—2—60 இரவு 10 மணியளவில்
க. சிங்கமுத்து எழுதிய
எரிமலை
நாடகம் நடைபெறும்

எம். செல்வராசு, எம். எல். ஏ.
பொருளாளர்.

சி முனுசாமி, தலைவர்.
வி. எஸ். மணி, செயலாளர்.

அறியாமல் முறுவல் ஒன்று வெளி வந்தது. நான் கொடுத்த ஆடையைப் பார்த்தோ, என்னவோ நன்றி உணர்வோடு என்னைப் பார்த்தாள்.

"நான் வெளியில் போகிறேன், கதவைத் தாழ்போட்டுக்கொண்டு, உடையை மாற்றிக்கொள்"—என்றேன். வெளியில் செல்லக் கதவைத் திறந்தவுடன் பதறினாள். "வேண்டாம், அவர்கள் மீண்டும் தேடி வந்தாலும் வரலாம். நீங்கள் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொள்ளுங்கள். நான் இதனை எடுத்து உடுத்திக்கொள்கிறேன்" என்று கொடுத்த ஆடையினை வாங்கிக்கொண்டாள்.

விளக்கை அணைத்துவிட்டுப்படுக்கையில் சாய்ந்தேன். உள்ளமோ விம்மிக் குதித்தது! பூரிப்புப் பொங்கி எழுந்தது! பயம்கப்பி நின்றது! புதுமையான அனுபவம்! தேன் கூட்டை எண்ணியவனுக்கு தேன் நிரப்பிய பொற்குடம் அல்லவா பக்கத்தில் நிற்கிறது! மனமோ பேதலித்தது. பண்பாடோ தடுத்து நிறுத்தியது.

இந்த முறை அவளே விளக்கை ஏற்றினாள். எழுந்து உட்கார்ந்து கொண்டேன். அவள் ஈரப் புடவையை உலர வைத்துவிட்டுத் திரும்பி நின்றாள். நிலாப்போல் எதிரில் நின்றாள்!

எப்படியோ எட்டு முழத்தை உடுத்தி இருந்தாள். உடலோடு ஒட்டிச் சோலிபோல் பிடிப்பாக இருந்தது பனியன். மேலாடையை மார்போடு சுற்றித் தலைப்பை இடுப்பில் சொருகி இருந்தாள். கருங்குழலைத் துவட்டி முடிபோட்டிருந்தாள். சாதாரணமாக அவள் அலங்காரத்தோடு இருக்கும் காட்சியைவிட இது மிகையாகத்தான் இருக்கவேண்டும். தூய வெண்ணிற ஆடை எடுப்பாக இருந்தது! சரிகைத் தலைப்பு மின்னொளியில் பளபளத்தது! அவளது இந்தத் தோற்றம் சிங்களப் பெண்களை நினைவுப்படுத்தியது.

"இப்படி உட்கார்" என அருகில் இருந்த நாற்காலியைக் காண்பித்தேன். குரல் ஏனோ தடுமாறியது. டப்பாவில் இருந்த ரொட்டியை எடுத்து அவளிடம் வைத்தேன். எனது அதிகபடியான உபசரிப்போ, அல்லது என்ன நினைத்துக் கொண்டாளோ, வைத்த ரொட்டியை எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக அவளது கரும் விழிகள் கலங்கின.

"என்ன இதெல்லாம், இப்பொழுது என்ன நடந்துவிட்டது, எதற்காக இப்படிக் கலங்கவேண்டும்"—என்றேன்.

பெற்றவள் மகவை வெகுண்டு அடிக்க—தகப்பன் அடிபட்ட மகவைத் தேற்ற — குழந்தையின் துயர் அதிகப்படுமே, அதுபோல் ஆகிவிட்டது. அவள் துயரம் பீறிட்டது. குழந்தைபோல் விம்மினாள். விசும்பினாள்.

அவளது விம்மலும், விசும்பலும் என் உள்ளத்தைக் கலக்கியது! கல் நெஞ்சமும் கரையத்தான் செய்யும் அவள் துயர் கண்டு! என்னை அறியாமலே என் கண்களும் கலங்கின! வந்து சிலமணி நேரம்தான் பழகினேன் என்றாலும், ஏன் இவள்மீது இத்தனை பாசமும் பரிவும் ஏற்படவேண்டும்?

என் கண்ணீரைக் கண்டோ, அல்லது என் மௌனத்தைப் பார்த்தோ அவளே இப்பொழுது பேசினாள்—

"ஐயா! தங்களை எனக்கு முன்பின் தெரியாது. இந்தப் பெரிய ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். என் வேதனையைக் கண்டு தாங்கள் வேதனை அடைகிறீர்கள். என் கண்ணீரைக் கண்டு தங்கள் கண் கலங்குகிறது." ஆனால்—

"என்னை இந்த இடரிலிருந்து காப்பாற்ற வேண்டியவள் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கினாள். என்னை ஒரு பண முதலைக்கு அடகு வைத்தாள். காமவெறி பிடித்த கயவனின் பஞ்சணையில் தள்ளினாள் என்னை! சூடாத மலராய் இருந்த என் வாழ்வைக் கசங்கிய மலராக்கிவிட்டாள்! காமவெறி பிடித்த கயவனின் பிடியிலிருந்து தப்பி வந்துள்ளேன் ஐயா! இல்லாவிட்டால்—இந்நேரம் என்னைப் பிணமாக்கியிருப்பான் அந்த வெறியன்" என்று கூறிவிட்டுக் கேவிக் கேவி அழுதாள்.

"பெண்ணே! நான் உன்னிடமிருந்து எதிர்ப்பார்த்த செய்திதான் இது! ஆமாம், உனக்கு வேறு யாரும் துணை இல்லையா?" என்றேன்.

அவள் தொடர்ந்தாள்—

"என் தந்தை ஒரு கார் ஓட்டி. தாயை இளமையிலேயே இழந்துவிட்ட என்னை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார் தந்தை! நான் எது கேட்டாலும் மறுக்காமல் வாங்கித் தருவார். என் கண் கலங்கினால் தந்தையின் கண் கலங்கும், எனக்குக் காய்ச்சல் என்றால் தந்தை துடித்துப்போவார். அத்தனை பாசத்தோடு என்னை வளர்த்தார் தந்தை".

"இந்த நிலையில் நான் மணப் பருவம் எய்தினேன். என் வளர்ச்சியையும், எழிலையும் கண்ட தந்தை, "தாமரை" இத்தனை அழகாய் இந்த ஏழையின் குடிசையில் பிறந்துவிட்டாய் அம்மா! எவனாவது ஒரு நல்லவன் கையில் உன்னை ஒப்படைத்தால்தான் அம்மா என் கவலை தீரும்" என்பார். என் திருமணத்தில் அத்தனை ஆர்வமும் ஆசையும் கொண்டிருந்தார் தந்தை.

ஒருநாள், "தாமரை! நான் சென்னைக்குக் கார் எடுத்துப் போகிறேன். அங்கு உனக்கு ஏதாவது பிடித்த பொருளைச் சொல்லம்மா, வாங்கி வருகிறேன்" — என்றார் தந்தை. "தங்கள் அன்பு இருக்கும்பொழுது வேறு என்னப்பா எனக்கு வேண்டும்"—என்றேன் தந்தையிடம். "என் அன்புக்கு என்னம்மா குறைவு, உனக்குப் பிடித்த பொருளைச் சொல்லம்மா" —என்று பிடிவாதம் செய்தார் தந்தை. "கைத்தறியில் நெய்த சேலையும் சோலியும் வாங்கி வாருங்கள் அப்பா"—என்றேன்.

தந்தையிடம் உரையாடிய கடைசி நிகழ்ச்சி இதுதான்! அதன்பின் தந்தை சென்னையிலிருந்து திரும்பவே இல்லை! கார் விபத்தில் சிக்கி உயிர் இழந்தார் என்ற செய்தியும்; எனக்காகத் தந்தை வாங்கிய கைத்தறிச் சேலையும் சோலியும்தான் கடைசியாக மிஞ்சியது.

தந்தை இறந்தபின்தான் என் வாழ்க்கையில் சோதனைகள் ஆரம்பமாயின.

பருவம் கொழிக்கும் பாவை! ஏழ்மையைத் தழுவியிருக்கும் ஏந்திழை! அத்தோடு யாருமற்ற அனாதை! கேட்கவா வேண்டும். பெண் வேட்டை வெறியர்கள் விலாசம் விசாரிக்கலானார்கள். என் தூரத்து உறவினள் ஒருத்தி மூலம் எனக்கு வலை விரித்தனர்.

அந்தச் சூதுக்காரி என் வாழ்வைக் குலைக்க வரும் சாகசக்காரி என்று அப்போது எனக்குத் தெரியாது. என் வருங்கால வாழ்வில் அக்கறை காட்டுபவள்போல் பேசினாள். என் மீது பாசமும் பற்றும் கொண்டவள்போல் நடித்தாள். ஏமாந்தேன்!

ஒருநாள் பக்கத்து நகரத்துக்கு பொருட்காட்சி பார்க்க அழைத்தாள் அவள்! வேண்டாம் என்று மறுத்தேன். நான் வெளியே போகக்கூடாத பருவத்தினள் என்றேன். கர்நாடகப் பெண்ணாக இருக்கிறாயே என்று என்னை வலியுறுத்தினாள். பொருட்காட்சி, வாழ்க்கையில் பார்க்கவேண்டிய ஒன்று என்று உபதேசம் செய்தாள். பெற்றவர்களை இழந்தபின் எனக்குத் துணையாக இருப்பவள். என்னை அழைக்கின்றாள். உடன் செல்ல மறுத்தால் வருந்துவாளே என்று உடன் சென்றேன். சென்றபின்தான் எனக்குத் தெரிந்தது— அவள் அழைத்துச் சென்றது பொருட்காட்சிக்கு அல்ல, ஒரு தங்கும் விடுதிக்கு என்று!

"இந்த விடுதியில் எனக்கு வேண்டியவர்கள் தங்கி இருக்கிறார்கள், வா உள்ளே சென்று பார்த்து வரலாம்" என உள்ளே அழைத்தாள். உடன் சென்றேன். என்னை அங்கு உள்ள ஒரு அறையில் தள்ளித் தாழ் போட்டாள். அப்பொழுதுதான் அவளுடைய சூழ்ச்சி எனக்குத் தெரிந்தது. "என்ன இதெல்லாம்" — என்று கத்தினேன். அதன்பின் என்னைப் பேசவிடவில்லை! ஒரு இரும்க் கரம் என் வாயைப் பொத்திற்று! திரும்பிப் பார்த்தேன்; ஒரு வெறியன் என்னைத் தழுவி இருந்தான். வாட்ட சாட்டமான உருவம்! முறுக்குமீசை! சிவந்த கண்கள்! நல்லவெறி. அவன் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை! பாம்பிடம் அகப்பட்ட தேரையானேன்!

அந்தக் கொடியவன் குடிவெறியில் தன் நினைவை இழந்தான். அந்த மாடிக் கட்டிடத்திலிருந்து எப்படியோ கீழே குதித்துத் தப்பினேன். அவனைச் சேர்ந்த ஆட்கள் இருவர் என்னைத் துரத்தினர். தாங்கள் எனக்கு உதவியிராவிட்டால் இந்நேரம் குழியில் புதைத்திருப்பார்கள்.

இதற்கு முன் அந்த வெறியனை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். எங்கள் ஊருக்கு பக்கத்தில்தான் அவன் ஊர். பெரும்புள்ளி என்ற வரிசையில் இருப்பவன். தேர்தல் வந்துவிட்டால் அவனை அடிக்கடி எங்கள் ஊரில் பார்க்கலாம். வெள்ளைச்சொக்காயும், மடிப்புக் கலையாத சால்வையும் போட்டுக்கொண்டு யோக்கியன்போல் மேடையில் பிரசங்கம் புரிவான். "நாட்டுக்கு நன்மை செய்பவர்கள் நாங்கள்தான். ஏழைகளின் பங்காளர் நாங்கள்தான்" — என்று! என் போன்ற எத்தனை பெண்களின் வாழ்வைக் குலைத்தானோ!"— என்று கூறிக் கண்ணீர் வடித்தாள்.

"பெண்ணே! உன் கதை, சொல்ல முடியாத வேதனையைத் தருகிறது. அழகுள்ள பெண், பிறந்தால் பணக்காரன் வீட்டில் பிறக்கவேண்டும். குடிசையில் பிறந்தால் இந்தக் கதிதான் நேரும்! ஐயோ என்று அலறினாலும் "அம்மா" என்று துடித்தாலும் யாரும் உதவ முன் வரமாட்டார்கள். எட்டி நின்று வேடிக்கை பார்க்கும் உலகம் இது! வெள்ளைச் சட்டைக்கும் சரிகைச் சால்வைக்குந்தான் படையும் பாதுகாப்பும்! உன்போன்ற ஏழைகளுக்கு அல்ல!"—என்றேன்.

இந்தவேளையில் யாரோ கதவைத் தட்டினார்கள். "யார் அது" என்று உள்ளிருந்தபடியே குரல் கொடுத்தேன். 'சோமு' கதவைத்திற என்று குரல் கொடுத்தார் தந்தை! 'இந்த நேரத்தில் ஏன் தந்தை வரவேண்டும், இப்பொழுது இரயிலோ, காரோ கிடையாது. என்னைப் பார்க்க வருவதென்றால் கூட ஆபீசுக்குதானே வருவார்'. இவ்வாறு மனதிற்குள் எண்ணினேன். இக்கட்டான சூழ்நிலையாகப் போய்விட்டது. அந்தப் பெண்ணிடம், "வந்திருப்பவர் என் தந்தை" என்று கூறினேன். வந்தவள் ஒன்றும் விளங்காமல் பரபரப்புடன் என்னைப் பார்த்தாள். "ஒன்றும் அஞ்சவேண்டாம் நாம் ஒன்றும் தப்பாக நடந்துவிடவில்லை! உன்னை ஆபத்திலிருந்துதான் காப்பாற்றியுள்ளேன். நம்மீது களங்கம் ஒன்றுமில்லை"— என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்தேன்.

என் தந்தை உள்ளே நுழைந்தார். வந்ததும் அந்தப் பெண் தந்தையைப் பார்த்துவிட்டு வீர் என்று கத்தினாள்! தந்தையையும், என்னையும் வெறித்து வெறித்துப் பார்த்தாள்! நடுங்கும் குரலுடன் "இவர் உங்கள் தந்தையா?" என்னைப் பார்த்துக்கேட்டாள். "ஆமாம்! ஏன்?" என்றேன் பரபரப்புடன். "என் வாழ்வைக் கெடுத்தவனா உங்கள் தந்தை! இந்த வெறியனுக்குப் பிறந்த மகனா தாங்கள்?" என்று கதறினாள்.

பின் அங்கு நிற்கவில்லை! வாயிலை நோக்கி ஓடினாள்! வெளியில் சென்று பார்த்தேன. மழைநீர் தேங்கிய அந்தத் தார் ரோட்டில், காலை இருட்டில் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தாள்!

அவள் தன் முடிவைத் தேடிக்கொள்ளும் முன்,—அவளைக் காப்பாற்ற வேண்டும்; அவளுக்கு வாழ்வு அளிக்கவேண்டும் என்று அவளைப் பின் தொடர அடி எடுத்து வைத்தேன்! அதற்குள், தந்தையின் இரும்புப்பிடி என்னைத் தடுத்து நிறுத்தியது! அதுபோது கீழ் வானத்தை நோக்கினேன்; விடிவெள்ளி ஒளி வீசிக்கொண்டிருந்தது! என தந்தையைப் பார்த்தேன், தலை குனிந்து நின்றார் எதிரில்! ●

சேலம் மாவட்ட

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு

அம்மாபேட்டை 2-ம் எண் மார்கட் மைதானத்தில்

21—2—60 ஞாயிறு காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை நடைபெறும்.

தலைவர்: **எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.,**

திறப்பாளர்: சீர்காழி **சோமசுந்தரம், பி. ஏ.,**

திரு. எஸ். டி. சோமசுந்தரம், (தி.மா.மு. கழகப் பொதுச்செயலாளர்)

மற்றும் பல மாணவர் தோழர்கள் மாநாட்டில் பங்கெடுப்பர்.

இங்ஙனம்,

இரா. வெங்கடேசன், வ. கு. தலைவர்.

மாநாடு சம்மந்தமாக தொடர்புகொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

இரா. வெங்கடேசன், 45-B, திரு. வி. க. பாதை, **சேலம்-3**

வெந்த புண்ணிலே வேல்!

என்று வருமோ, எப்படி இருக்குமோ என ஆயிரமாயிரம் ஆசைக் கனவுகளிலே மிதந்துகொண்டிருந்த, மத்திய அரசின் கீழ் பணியாற்றும் இருபது இலட்சம் ஊழியர்களின் எண்ணத்தைப் பொசுக்கிடுமளவிற்கு, இரண்டாவது சம்பளக் குழுவின் அறிக்கையை, மத்திய அரசினர் வெளியிட்டுள்ளனர்.

வாழ்க்கைத்தரம் மிகமிக உயர்ந்துவிட்டது. தற்போதைய சம்பளத்தினால் வாழமுடியவில்லை. உணவுப் பொருள்களின் விலை மிக மிக உயர்ந்துவிட்டது. அத்தியாவசியப் பண்டங்களின் விலையோ எண்ணிட முடியாதநிலை. முப்பது நாள் உழைத்துப் பெறும் ஊதியமோ, மூன்றுநாள் செலவிற்குத்தான் சரிசெய்யப்படுகிறது. ஆகவே, நாட்டின் விலைவாசி உயர்வை எண்ணியும், ஏற்கனவே முதலாவது சம்பளக் குழுவின் சிபார்சை ஒட்டியும், இரண்டாவது சம்பளக்குழு அமைத்து, தங்களது கோரிக்கைகளை நியாயமான முறையிலே கவனிக்கும்படி சென்ற பல ஆண்டுகளாக, அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கமும், மத்திய அரசின் கீழ் பணியாற்றும் ஏனைய சங்கங்களும் வேண்டுகோள் விட்டனர்.

மக்களது மாபெரும் சக்தியை, மிகமிக துச்சமென மதிக்கும் மத்திய அரசினர், ஊழியர்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. எடுபிடிகள்தானே இவர்கள்; என்ன செய்ய இயலும் என எண்ணி இறுமாந்திருந்தனர். தட்டிக் கழித்தனர்.

அரசினரது, கவனத்தை மிகமிக விரைவிலே இழுக்கவேண்டும் என எண்ணிய சம்மேளனத்தார் இரண்டாண்டுகட்கு முன்னர், வேலை நிறுத்தம் செய்வதென முடிவு கண்டனர்.

மக்களது சக்தி கட்டுக்கு மீறி விடுமோ என மத்திய அரசினர் கருதி, உடனுக்குடன், சம்பளக் குழுவை அமைக்க உறுதியளித்ததுடன், சம்மேளனத்தாரின் சில பல கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டனர். பேராபத்தை நோக்கிச் செல்லவிருந்த ஒரு அபாயத்திலிருந்து, நாடு மீட்கப்பட்டது.

அறிவிப்பிற்குப் பின்னர், இன்றுவரும், நாளைவரும் என்பதாகக்கூறி எவ்வளவு தாமதப்படுத்த இயலுமோ, அவ்வளவும் செய்து அண்மையில் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அரசின் துதிபாடும் ஏடுகள் சில மத்திய அரசின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு என விளம்பரப் படுத்தியதோடன்னியில், இச் சிபாரிசை வரவேற்கவும் செய்துள்ளன.

அட்சயன்

ஆனால் மத்திய அரசினரது சம்பளக் குழுவின் அறிக்கை அமுலாக்கப்படுமானால், அதனால் பேரிழப்புக்கு இலக்காகுபவர்கள் இருபது இலட்சம் ஊழியர்களே என்பது மக்களுக்குத் தெரியாத உண்மை

சம்பளக் குழு அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை, தற்போதைய நிலையில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியவில்லை. விலைவாசி உயர்வினைச் சமாளிக்க வேண்டுமாயின், மிகுதியாகப் பணம் அளித்தாகவேண்டும் என்ற கருத்தினை உள்ளடக்கியே தான், மத்திய அரசினை, ஊழியர்கள் வேண்டிக் கொண்டனர்.

நாட்டுப் பற்றற்றவர்கள் என்பதாகவோ, நாட்டினது அபிவிருத்தித் திட்டங்களில் ஆர்வமில்லாதவர்கள் என்பதாகவோ இவர்களைக் கருதிவிட முடியாது.

இன்றைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கென அதிகப்படியான ஊதியம் கேட்ட ஊழியர்களுக்கு மீண்டும் பணக்குறைப்புச் செய்யும் வழியையே மத்திய அரசு, சம்பளக் குழுவின் மூலமாகப் புகுத்தியுள்ளது.

இதுவரை கட்டாயமாக்கப்படாமலிருந்துவந்த பிராவிடண்ட் சேமிப்புமுறை, இனிக் கட்டாயமாக்கப்படவிருப்பதால், அரசினருக்கு இருபது இலட்சம் ஊழியர்களிடமிருந்து, இத்தகைய சேமிப்பு மூலம் கட்டாயமாக ஒரு ஊழியரிடமிருந்து குறைந்த பட்ச சேமிப்புத் தொகை ரூபாய் 20 எனக்கணக்கிட்டாலும்கூட, ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 48 கோடி ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைக்க வழியேற்படுகிறது,

வாழ்க்கைக்கு வசதியும், பிற செலவினங்களுக்கும் போக ஏதாவது மீதமிருப்பதைத்தான், மிச்சப்படுத்த முடியும். சம்பளக் குழுவை ஏற்படுத்தவேண்டுமென வேண்டிய ஊழியர்களோ, ஒட்டிய வயிற்றையும், ஒளியிழந்த கண்களையும் காட்டியே, சம்பள உயர்வு காரணமாகக் கேட்டனர். அதாவது தற்போதைய ஊதியம் செலவினங்களுக்கே போதவில்லை என்ற காரணம் காட்டி, இரண்டாவது சம்பளக் குழு அமைப்பதன் காரணமாக, ஏதாவது பரிகாரம் காணலாம் என எண்ணினர்.

இவர்கள் கேட்டது வாழ்வு, அரசாங்கம் கொடுத்ததோ சாவு.

"வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

என்ற தவறான முறையிலே ஊழியர்களது வறிய நிலையை துச்சமெனக் கருதி கொடுங்கோல் மன்னனது நிலையிலே அரசாங்கச் சிப்பந்திகளிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு கட்டாயமாகச் சேமிப்பு முறையிலே 48 கோடி ரூபாயைத் தட்டிக் கொண்டு போகவிருக்கிறார்கள்.

சம்பளக் குழுவின் சிபாரிசு அமுலாக்கப்படுமானால் மத்திய அரசின் கீழ் தற்போது ரூ. 80 அடிப்படைச் சம்பளம் பெறுபவரின் நிலை கீழ் கண்டவாறு அமையும்.

	தற்போது.	பின்னர்.
சம்பளம்	80	130
பஞ்சப்படி	50	10
நிவாரணம்	5	—
வீட்டு வாடகை	7	7·50
	142	147·50
சேமிப்பு	11·83	12·30
	130·17	135 20
நிகர அதிகப்படி		5 03

ஆக ஆண்டொன்றிற்கு அதிகமாக கிடைக்கவிருக்கும் தொகை 60·36.

ஆனால் விடுமுறை தினக் குறைப்பு, அதிகபட்ச தின உழைப்பு ஆகியவற்றினைக் கீழ் கண்டவாறு கணக்கிடும்போது ஆண்டிற்கு 33 முழுதினங்கள் அதிகமாக வேலை செய்தாகவேண்டும்.

1. 23 நாட்கள் அரசாங்க விடுமுறையிலிருந்து 16 நாட்களாக குறைக்கவிருப்பதால் அதிகமாக வேலை செய்யவேண்டிய நாட்கள்	7 நாட்கள்
2. விடுமுறை தினம் (Casual leave) 15லிருந்து 12 ஆக்கப்படுவதன் காரணமாக	3 ,,
3. சனிக்கிழமை முழுநேர வேலையாக்குவதால் 52 வாரத்தில்	14 ,,
4 விடுமுறை முழு ஊதியத்துடன் 33 லிருந்து 24 ஆக குறைப்பதன் காரணமாக	9 ,,
	33 ,,

ஆக மத்திய சர்க்காரின் ஊழியர் 33 நாட்கள் அதிகமாக உழைப்பதன் காரணமாக 80 ரூபாய் பெறுபவரின் பணிநிதியில் இழப்பு 102 27 ரூபாய்.

ஆண்டிலே பெறும் அதிக வருவாய் 60 36.

ஆக இரண்டில் இழக்கவேண்டிய தொகை அதாவது அரசாங்கம் ஆண்டொன்றுக்கு ஒரு ஊழியரிடமிருந்து பெறும் உழைப்பு ரீதியான பணம் 101·91. இந்த ரீதியில் இருபது இலட்சம் ஊழியர்களிடமிருந்து அரசு பெறும் பணம் 20 கோடியே 38 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயாகும்.

ஆனால் அரசினர் சொல்லுகிறார்கள், சம்பள உயர்வு கொடுப்பதன் மூலம் ஆண்டிலே அரசினர்க்காகும் செலவு 16 கோடி என்பதாக.

கட்டாய சேமிப்பு மூலம் அரசினர் பெறுவது 48 கோடி அதிகப்படி வேலைப்பளுவின் காரணமாகப் பெறுவது 21 கோடி

ஆகமொத்தம்	69 கோடி
அரசாங்க செலவு	16 —
நிகர லாபம்	53 —

பொதுத் துறையிலே கவனம் அதிகமாகச் செலுத்தப்படவேண்டும், தனியார் துறையினர் அரசாங்கத்தாரின் பொதுத் துறையிலிருந்து நிறையப் படிப்பினை கற்றுக் கொள்ளவேண்டும் என்ற நியதி நிலவிடவேண்டிய இற்றை நாளிலே கஞ்சிக்கே வழியில்லை எனக் கதறிக் கேட்ட மக்களிடம் மறைமுகமாக 53 கோடி ரூபாய் பெறுமானத்தைப் பெறவிருக்கிறது.

மத்திய சர்க்காரிடம், நிதி வேண்டி நின்ற ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட நிலை இதுவா?

மக்களது நலனில் மிகமிக நாட்டம் கொண்டு, சோஷலிசத்தை நோக்கி விரைந்து செல்லவிருக்கும் அரசாங்கம், தன்னிடம் பணியாற்றும் ஊழியர்களுக்கே இத்தகைய நிதி வழங்கினால் இதை என்னவென்று சொல்வது?

இரண்டாவது சம்பளக் குழு, முதற் சம்பளக் குழுவினது சிபாரிசினைக் காட்டிலும் நல்ல முறையில் கணிசமான நிவாரணத்துடன் அமையப்பட்டிருக்கும் என எண்ணிடுவோருக்கு 630 பக்கங்களுடன் 1947ல் வெளியிட்ட அறிக்கையைக் காட்டிலும், 194 பக்கங்கள் அதிகமாக வெளியிட்டுள்ளார்களே தவிர, கணிசமான நிவாரணம் பெயரளவில் கூட இல்லை.

முதல் திட்டம், இரண்டாவது திட்டங்களால், நாட்டின் செல்வ நிலை உயர்ந்திருக்கிறது எனப்புள்ளி விவரங்கள் காட்டப்படுகின்றன. செல்வ நிலை உயர்ந்துள்ளது உண்மையென்றால், அதன் பயனை அரசின்கீழ் அத்திட்டத்திலே மிக நெருங்கிய பங்குகொண்ட சிப்பந்திகள் பெறக் கடமைப்பட்டவர்களல்லவா?

அதே குறிக்கோளுடன் நிவாரணம் கேட்ட ஊழியர்களுக்கு இத்தகைய கொடிய முறை அமுலாக்கப் படவிருக்கிறது என்றால், இதை எம்முறையில் ஒப்பிடுவது!

நொந்த உள்ளத்துடன் கூடிய இருபது இலட்சம் ஊழியர்களது எண்ணத்தில் வேல்கொண்டு தாக்கியதுபோன்ற கோர சம்பவமே இக்குழுவின் சிபாரிசு.

★

முக்கிய அறிவிப்பு

பொங்கல் விடுமுறைக்குப்பின் 17, 24—1—60-ல் வெளிவர வேண்டிய இதழ்கள் கிடைக்கவில்லை என்று பலர் எழுதிய வண்ணமுள்ளனர். மேற்குறிப்பிட்ட இரண்டு இதழ்களும் விடுமுறை காரணமாக வெளியிடப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

நிலவும் அலையும்

—(தமிழவேள்)—

நீலக் கருவானில் நின்றொளிரும் மீன்களிடைக்
கோல முழுநிலவு கோலோச்சப் பாரெல்லாம்
வெண்பட்டுப் போர்த்தால் எனவிளங்கும் காட்சியிலே
எண்ணம் செலவிட்(டு) எழிலிற் றிளைத்தபடி
மாடிப் பளிக்குநிலா முற்றத் திருந் தொருநாள்
கூடிக் கொதித்துக் கடலலைகள் பொங்குவதைப்
பார்த்தேன். அவைகள் புரண்டு புரண்டுமிக
ஆர்ப்பதுமேன் வெண்ணிலவில்? அந்தோ! எனஇரங்கி,
"வெண்மை அலைகாள்! தமிழர்போல் உங்கட்கும்
என்னத் தொலையா இடையூறோ?" என்றிட்டேன்
ஏதும் பதிலே எழவில்லை மாறாக்
காதோ செவிடுபடக் கூவி இரைகின்ற
பேரொலிதான் கேட்டேன், பெரிதாய் எழுந்துவரும்
பேரலைகள் துன்பம் புரியாதேன் சிந்தித்துப்
பின்முடிவில், "ஓ! ஓ! புரளும் அலைகட்குக்
குன்றாத காதல் குளிர்நிலவோ(டு) உண்டாங்கொல்?
அன்பின் முதிர்வாம் அதனாற்றான் பொங்குவதோ?"
என்றெண்ணி மீண்டும் எழும் அலையைப் பார்த்தேன்யான்
என்சொல்வேன்! தங்கள் இருகையும் நீட்டியெழுந்
தன்பால் மதியத்தைக் கட்டி அணைத்திடவே
ஓயா தவைகள் உயர்ந்தலைதல் போல்தோன்ற
சாயாது வானில் சிறந்தொளிகால் திங்களினை
நோக்கி, "ஒளிமதியே! நுண்ணறிவில் வல்லோயே!
ஏக்கம் உறும் அலையின் எண்ணம் அறியாயோ?
விண்ணகத் தினின்றும் ஒருநாள் இறங்கிவந்து
மண்ணகந்துப் பேரலையை முத்தம் கொடுத்தணைத்துப்
பின்போயின், என்னே பிறழ்ந்தாபோம் வானுலகம்?"
என்றேன். உடனே எழில்நிலவோன் கேட்கின்றான்;
"ஆர்வம் இருந்தும், அறிவிருந்தும் உன்னாட்டில்
சீர்கல்வி கற்றற்குச் செல்வம் கிடையாமல்
ஏங்கித் தவிக்கும் இளைஞரெனும் அலைகள்
ஓங்குயர் கல்வியெனும் ஒண்மதியை எட்டிடவே,
பொங்கி அலைந்து புரண்டழுதல் காணாயோ?
எங்கும் எவரும் எளிதாகக் கல்வியினைக்
கற்கும் வகைசெய்யின் கல்வி மதியோடு,
முற்றா இளைஞர் மகிழாரோ சேர்ந்தொன்றி?
ஒத்த அறிவும் ஒருமித்த உள்ளன்பும்
மெத்த இருந்தும் மணங்கொள்ளக் கூடாமல்
சாதி எனுமொன்று சூழ்ந்திடலால் உன்னாட்டில்
பாதிக்கப் பட்டே பிறழாத காதலினால்
ஆண்கள் எனும்அலைகள் பெண்களெனும் அம்புலியைக்
காண்தோறும் பொங்கிக் கலங்கிடுதல் காணாயோ?
மன்பதையில் எல்லாம் மனிதர் அவருள்ளே
இன்னார் ஒருசாதி இன்னொருவர் வேறென்று
சொல்லல் அறவே சரியல்ல என்பதனை
எல்லோரும் நன்குணரச் செய்து பிரிவின்றி
நன்னெறியில் வாழும் நிலையிங்கே உண்டாக்கின்
அன்பால் இருவர் அகம்விழைய இன்புடனே
இல்வாழ்க்கை ஏற்று எழில்நிலவாம் பெண்களுடன்
வல்லவராம் நல்லாண்கள் வாழாரோ சேர்ந்தொன்றாய்?
பாழும் வயிற்றுக்குப் பாடுபட்டும் உன்னாட்டில்
கூழும் கிடைக்காமல் குந்தி அழுதழுது,
பொல்லாத கவலை புறமொழியப் பூக்கின்ற
நல்வாழ்வாம் வெண்ணிலவை நித்தம் நினைத்தபடி
ஏழ்மை எனுங்கடலில் இன்னுயிர்தாம் போமளவும்
வாழ்ந்தலையும் எண்ணில் வறிஞர்களைக் காணாயோ?
எல்லோரும் வாழ இயற்கை துணைசெய்தும்
நல்லாற்றில் நின்று நடுநிலையாய் வாழாமல்
தன்னலமே பேணும் தடுமாற்றத் தால்தானே
இன்னல் மிகஅடைந்(து) இங்கே பலர்வாடல்?
தங்களின் சக்திக்குத் தக்க உழைப்பளித்துத்
தங்களின் தேவைக்குத் தக்க வசதிபெறும்
நன்முறையை இங்கே நிலைநாட்டின் மன்பதையில்
இன்பார்ந்த வாழ்வாம் எழில்நிலவை எல்லோரும்
எட்டிப் பிடித்து எவரும் துயரின்றி
மட்டில் மகிழ்ச்சியுடன் மாந்தரெலாம் வாழாரோ?
எட்டும் நிலவாம் இவற்றைப் பிடித்தொருநாள்
கட்டி அணைத்தின்பம் கண்டிடவே உன்போலும்
மக்கள் மிகநொந்து மண்ணில் அலைவுற்றுத்
திக்கற்(று) இருக்கும் திசைநோக்கிப் பாராமல்..."
என்று தொடர்ந்தின்னும் ஏதோமேற் சொல்லிடுமுன்
அன்பால் குழவியினை அன்னை அணைப்பதுபோல்
அங்கே ஒருமேகம் அம்புலியை வந்தணைக்க
மங்கி நிலவோன் மறைந்தான்யான் கண்விழித்தேன்!

சாதி வேண்டும்!

—[கு. குட்டுவஞ்சேரல்]—

தலைப்பைக் கண்டவுடன், இதை எழுதியவனும் இந்தத் தமிழகத்தில்தான் வாழ்கிறானா? இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் தன் வாழ்நாளைக் கழிக்கின்றானா? சாதி ஒழிய வேண்டும். சமுதாயம் சீர்பட வேண்டும் என்று எல்லாக் கட்சியினரும் மாறுபாடின்றிக் கூறிவருகிற இந்நாளில் இந்தத் தலைப்பை எழுதலாமா? என்று பலர் பலவாறாக அவரவர் தரத்துக்குத் தகுந்தபடி தாக்குவர். ஆனால் சிறிது ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் ஏசவேண்டியது யாரை என்பது தெரியும். பின் யார் என்று வினாவெழுப்பினால் அது நமது மதிப்பிற்குரிய மாம்பலத்துப் பெருமகனாரைத்தான் சாரும் என்பது இப்போது பலருக்குப் புரியும்.

என்னெனில், ‘சமுதாயம் சீர்பட வேண்டுமானால் சாதிப்பாகுபாடுகள் வளரவேண்டும். ஏழை மக்கள் காப்பாற்றப்படவேண்டுமானால் சாதிகள்காப்பாற்றப்படவேண்டும். நடுத்தர மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். இதற்குச் சாதிகள் இருந்தாகவேண்டும். ஏழை மக்களின் கல்வி அறிவின் தரமும் பொது அறிவின் நிலையும் உயர வேண்டுமானால், சமுதாயத்தில் நல்ல மதிப்பு இருக்கவேண்டுமானால், இவர்களின் வாழ்க்கை வசதிகள் பெருகவேண்டுமானால் இதற்குச் சமுதாயததில் சாதிப்பாகுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் இருக்கத்தான் வேண்டும். அப்பொழுது தான் ஒரு குறிப்பிட்ட சாதியில் உள்ள பணக்காரர் அந்தச் சாதி மக்களுக்கு நன்மை செய்வது போலவே, அந்தந்தச் சாதியிலுள்ள பணக்காரர்களும் அவரவர் சாதியைச் சார்ந்துள்ள மக்களுக்கு உதவ முடியும். இதற்காக ஒருசிலர் சாதியே இருக்கக்கூடாது. அது இருந்தால் இன்னல் இருக்கும். ஏழைகள் வாழமுடியாது— உயரமுடியாது என்று கூறிப் போராட்டம் நடத்துகிறார்கள்’’ என்று மிக வருத்தப்பட்டு மதுரைக்கு அண்மையில் உள்ள மேலூரில் நடந்த சொந்தக் கட்சியான சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் இந்தக் கருத்துப்படப் பேசியிருக்கிறார், அன்பர் ஆச்சாரியார் அவர்கள்

இந்த நாடு இந்த நிலைக்குத் தாழ்ந்து தலைகுனிந்து கிடப்பதற்கு முதற்காரணம் இந்தச் சாதி செய்த சதியேயாகும். இன்று மாற்றான் பிடியில் மண்டியிட்டுக் கிடப்பதற்குக் காரணம் இந்தச் சாதியை வைத்துச் சண்டாளர்கள் செய்த சதிவேலையே காரணமாகும். பழந்தமிழ்ப் பண்பிழந்து பஞ்சையாய் பராரியாய்க் கிடப்பதற்கும், கொஞ்சும் மொழியாம் நம் செந்தமிழ் மொழி சீரிழந்து சிறப்பிழந்து கிடப்பதற்கும், உரிய பெயர்கூட சொந்த நாட்டுக்கு வைக்கப்படாத அவல நிலைக்கும், இன்னபிற காரணங்கள் அனைத்திற்கும் மூல காரணம் சமுதாயத்தில் சாதி செய்த உயர்வு தாழ்வு மனப்பான்மையேயாகும்.

இந்த ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை பலர்விடாப்பிடியாகக் கட்டியாண்டு வந்ததின் விளைவாக — அதனை நம்பி நம்மில் பலர் பெருகி வந்ததின் காரணமாக ஏழைகள் ஏமாறவும், ஏமாற்றப்படுவோர் அதிகரிக்கவுமான நிலை பிறந்தது. இந்த நிலை மற்ற எல்லாத் துறைகளுக்கும் பரவி பணிபுரியத் தொடங்கியது. இதனால் ஏதுமறியாத நாம் ஏமாந்து — சூழ்ச்சிக்கு ஆட்பட்டு இந்த நிலைக்கு இருத்திவைக்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில், தீண்டாமை பாராமை, பிறப்பில் பேதம் கற்பித்தல், சாதிப்பிரிவுகள், சமயப் பூசல்கள், தரகுத் திருமணம், புரோகிதத் திருமணம், பிறமொழி மந்திரம் கூறல், அடிமை வேலை செய்தல் போன்ற இகழ்ந்தொதுக்கத்தக்க—எள்ளி நகையாடத்தக்க — வெறுத்தொதுக்கத்தக்க நிலை இடைக்காலத்தின் நிலையாகும்.

இந்த இடைக்காலப் பண்பாட்டினின்றும் — பரம்பரையினின்றும் வழிவந்த நாம் இவைகளைக் கூடாது என்று கூறுவதில் தவறு என்ன இருக்க முடியும். அதிலும் இந்த முறைகளினால் ஆபத்து நமக்கு விளைந்துவிட்டது. இந்த ஆபத்தைத் தடுத்து இனிமேலும் பரவவிடாது தடுக்கவேண்டும் என்று கூறுவதில் என்ன பிழை இருக்கமுடியும்.

“சாதியை ஒழிக்கவேண்டும் என்று ஒரு சிலர் போராட்டம் நடத்தி வருகிறார்கள்’’ என்று கூறுகிறார். சாதியை ஒழிக்க வேண்டும்—சமயப் பூசல்களைக் களையவேண்டும் என்று நாங்கள் மட்டுந்தானா கூறிவருகிறோம்? அதுவும் இப்பொழுதுதானா கூறுகிறோம்? என்று இந்தப் பைந்தமிழ் நாட்டில் சாதிப் பாகுபாடுகளும் சமயப் பூசல்களும் அதனைச் சார்ந்த இன்ன பிறவும் வந்து புகுந்ததோ அன்றே நந்தமிழகம் எருமை புகுந்த குளமாயிற்று. பாம்பு புகுந்த பூஞ்சோலையாயிற்று. அன்றுதொட்டு எம்முன்னோர் கண்டித்து வந்திருக்கின்றனர். அறிவுரை கூறி இயன்ற மட்டும் திருத்தி வந்திருக்கின்றனர்.

“மேல் வகைக் கீழ் வகை விளங்குவது
ஒழுக்கால்’’

“குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே’’—என்றும்

“முற்படைப் பதவியில் வேறாகிய
முறைமைபோல்
நால்வகைச் சாதிஇந் நாட்டில்நீர்
நாட்டினீர்’’

என்று சாதி நஞ்சினைப் புகுத்தியவரைச் சாடுவதும் தவறா? அல்லது கன்னித் தமிழ்ப் புலவர் கபிலர்தான் கூறியது தவறா?

"சாதிப் பிரிவிலே தீ மூட்டுவோம்" என்று சித்தர் கூறியது சிந்தித்தா? சிந்திக்காமலா?

"சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப்
பொய்பாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவ
தெக்காலம்"

என்று பத்திரகிரியார் பகர்வது பாபமா? பகுத்தறிவா?

"சாதியிலே மதங்களிலே சமய
நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலேகின்ற உலகீர்
அலேந்தலேந்து வீணே நீரழித லழகலவே..."

என்று மனம் நொந்து மக்களேப் பார்த்து இராமலிங்க அடிகள் பாடுவது எற்றுக்கு?

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமை யான்—என்று

பொய்யில் புலவர் புகன்றது என்ன பயன் கருதி? வள்ளுவர் வாசகம் வரைந்த வல்லுநர்—வள்ளுவரை மறந்ததேன்?

இவர்களெல்லாம் இந்த நாட்டுக்கு—மக்களுக்கு எடுத்துக்கூறி மக்களே நல்வழிப்படுத்தித் திருத்த முயன்றது போலவே, நாங்களும் அந்த நன் முயற்சியினே இடைவிடாமல் தொடர்ந்து செய்து வருகிறேம்.

ஏன், இப்போதுசாதிப்பாகுபாடு பற்றி ஆதரித்துப்பல இடங்களில் பேசிவருகிற இவரே, அன்று காந்தியாரைக்கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று கூறினவுடனே, அதற்கு—அந்த ஆலய மகத்துவத்திற்கு எதிராக — ஆலயப் பிரவேசச் சட்டத்திற்கு ஆதரவு கொடுக்கவில்லேயா? தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்,மற்றத் தீண்டத்தகாத மக்களுக்காகவும் கோயில் நுழைவுக்கு ஒத்துழைக்கவில்லேயா? சாதிவிட்டுச் சாதி சென்று திருமணம் செய்து காந்தியாரின் சம்பந்தி ஆகவில்லேயா? அப்போதெல்லாம் தொல்லேப்படுத்தவில்லே இந்தச் சாதி! அப்பொழுது பாபம் எங்கே போயிற்று? புண்ணியம் எங்கே வந்தது? விளக்க முரைப்பாரா இந்த வள்ளுவர் வாசகத்தார்?

இன்று இவர் காப்பாற்ற முயலுகிற இந்தச் சாதிமுறைப் பாகுபாடு அன்று இவராலேயே களங்கப் படுத்தப்பட்டுவிட்டது. இதனே இந்நேரம் மக்கள் மறந்திருப்பர் என்ற எண்ணத்தில் இப்படிக் கூறுகிறுர் இப்போது.

ஆனல் நாம் என்ன கூறுகிறேம் என்ருல், இந்த நாட்டில் சமத்துவம் ஏற்படவேண்டும். உயர்வு தாழ்வு மனப்பான்மை ஒழிய வேண்டும். ஏழை — பணக்காரன் என்றவிதி எடுக்கப்படவேண்டும். சாதிகள் இருக்கக்கூடாது. சமயப் பூசல்கள் இருக்கக்கூடாது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கடவுட் கொள்கை இருக்க வேண்டும். அதுவும் கந்தழி கடவுட் கொள்கையாக அமைய வேண்டும். நாடு அடிமைப் படுகுழியில் இருப்பதைக்கண்டு வாளா இராமல், விரைவில் விடுதலே தேடி வாங்கித் தரவேண்டும். மொழியைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். தன் இனத்தை மற்ருெரு இனம் அடிமைப்படுத்தல் கூடாது. வடவரடிமை விலங்கொடித்து அல்லலுறும் மக்களுக்கு நல்ல வழிகாட்டி, நாடு நமதாகி நல்லோர் பலராகி, ஒன்றுபட்ட உள்ளத்தினராய் வென்றுவிட்ட மனத்தினராய் சுதந்திரத் திராவிட அரசமைத்து அதில் சுற்றி வட்டமிடும் வானம்பாடிகளாய் வாழவேண்டும். இப்படி ஒரு சாதி வேண்டும். அன்பர் ஆச்சாரியார் கூறும் சாதி, பூசலேத் தான் வளர்க்கும், நாம் கூறும் சாதி நலிவினேப் போக்கும், நல்லாட்சி ஏற்படுத்தும்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

'காண்போம் காதலியை; கடைக்கண் வீச்சுக் காட்டிக், கார்கூந்தல் காட்டிக், கண்ணடிக் கன்னத்தைக் கனியாக்கிச், சோர்வகற்றும் சொல்லமுதூட்டுவாள்; அமுதுண்டு, அன்பின் அரவணேப்பில் ஆழ்ந்திருப்போம்' என்றஎண்ணத்திற்குத் தன் இதயத்தை மாற்றியமைத்துக்கொண்டு வந்தவன், துடியிடையாளேக் காணுது கலக்கமுற்ருன்! புயலிடைச் சிக்கிக் கரை காணுது தத்தளிக்கும் கலத்தைப் போல் உள்ளம் தத்தளித்தது! எண்ணிய எண்ணங்களால்-இன்ப நினேவுகளால்—எதிர்காலக் கோட்டையால் வார்த்தைகள் வெளி வருகின்றன:

"நெஞ்சமே! நீ ஏன் வீணுக அலேகின்ருய்? அவளெங்கே இனி வரப் போகிருள்? நீ எங்கே இன்பத்தைப் பெறப்போகிருய்? அவள் நல்லவள்; அழகுள்ளவள்; அன்புள்ளவள் தான்! இல்லாவிட்டால், நான் வந்தபோதெல்லாம் முகமலர வரவேற்று இன்ப உரையாடி அன்புத் தோணி செலுத்தி இருப்பாளா? பின்... வறியோன் வாழ்வில் காதல் ஏது? இன்பமேது? கிட்டாத இடத்தில் நாட்டமுற்றல் நட்டமன்ருே?" என்று நெஞ்சோடு கிளத்துகிருன்.

இத்தகு கருத்தை எழிலுற எடுத்துரைக்கும் பாடலே, குறுந்தொகை என்னும் நறுந்தமிழ்ச் சாறூறிய பாவினுள், பரணர் என்ற பைந்தமிழ்ப் புலவரின் வாயிலாகக் காணுங்கள்:

"இல்லோன் இன்பம் காமுற்ரு அங்கு,
அரிது வேட்டனேயால்—நெஞ்சே! காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியாதோயே"

(குறுந்தொகை 19)

காதலியைக் கண்டு மகிழ்ந்து களித்து விளேயாடவந்தவன்; எதிர்பாராத இயற்கையின் விளேயாட்டால் நிகழ்ந்த நிகழ்ச்சியால் காண முடியாதவாறு தடைப்படுத்தப்பட்டு, உண்மைநிலே அறியாது, உள்ளம் நொந்து வெந்து 'இல்லோன் இன்பம் கரமுற்ரு அங்கு அரிது வேட்டனேயால்–நெஞ்சே! என்று எடுத்துரைக்கின்ற தன்மை நமக்கே வேதனேயைத் தருகிறதல்லவா? அவனுக்கெப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணுதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.